பக்கங்கள்-16 | 11.மாசி.2024 | விலை-50.00






# தினப்புயல்

PIN news

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06






மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் - 431



## இலங்கையின் 76வது சுதந்திர தினம் வடகிழக்கில் கரிநாளாக அனுஸ்டிக்கப்பட்டது ஏன்?




## தமிழரசுக் கட்சி வேண்டுமாயின் DTNAவுடன் இணைந்து செயற்படலாம் - சுரேஸ்



## சிங்களப் பேரினவாதிகள் ஒருபோதும் தமிழினத்திற்கு சுதந்திரத்தை வழங்கப்போவதில்லை

-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

# இலங்கையின் 76வது சுதந்திர தினம் வடகிழக்கில் கரிநாளாக அனுஸ்டிக்கப்பட்டது ஏன்?




இலங்கையின் 76வது சுதந்திர தினத்தை முன்னிட்டு வடக்கு மற்றும் கிழக்கில் தமிழர் தாயகப் பூமியில் மாபெரும் எழுச்சிப் போராட்டங்கள் வெடித்தது. இந்த சுதந்திர தினத்தையும் கரிநாளாகப் பிரகடனம் செய்து தமிழ் மக்களால் எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. அதிலும் குறிப்பாக பல்கலைக்கழக மாணவர்கள் பாரிய புரட்சியொன்றினை ஏற்படுத்தியிருந்தனர்.

சுதந்திரம் என்பது அரசுக்கு எதிரான போராட்டங்களையும் எதிர்க் கருத்துக்களையும் அனுமதிப்பதுதான். ஆனால் சிறிலங்கா சுதந்திரதினத்தில் தமிழர்களுக்கான பரிசு என்ன என்பதை கிளிநொச்சியில் நிறைவேற்றப்பட்ட போர்க்களம் நன்றாக உணர்த்தியிருக்கிறது. சிறிலங்கா சுதந்திரதினத்தை கரிநாளாக அனுஷ்டிக்க வேண்டும் என்று பல்கலைக்கழக மாணவர்களும் அரசியல் தலைவர்களும் அழைப்பு விடுத்தார்கள். ஆனால் அதனை கரிநாளாக்கிய பெருமை ரணில் அரசுக்கு கிடைத்திருக்கிறது. இங்குதான் அன்றைய நாள் ஈழத் தமிழர்களை ஒடுக்கி அழிக்கும் ஆக்கிரமிப்பின் நாளாக நம்மால் உணரச்செய்யப்படுகிறது.

பெப்ரவரி 04ஆம் நாள், சிறிலங்காவுக்கு பிரித்தானியர்கள் சுதந்திரத்தை அளித்த நாள். இச் சுதந்திரத்திற்காகவும் அன்றைய சிலோன் உருவாக்கத்திற்காகவும் ஈழத் தமிழ் மக்கள் பெரும் உழைப்பையும் ஆளுமையையும் வழங்கி இருந்தார்கள். ஆனால் பின் வந்த காலத்தில் சிங்களப் பேரினவாதம், சிறுபான்மை மக்களை மெல்ல மெல்ல அடக்கவும் ஒடுக்கவும் அழிக்கவும் துவங்கியது. இதன் முதற்கட்டமாக 1956இல் தனிச்சிங்களச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இதனால் ஈழத் தமிழ் மக்கள் பெரும் ஏமாற்றத்தை சந்தித்ததுடன், அரசுக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுத்தார்கள்.

அன்றிலிருந்து இன்றுவரை அறவழிப் போராட்டங்கள் வன்முறையால் அடக்கி ஒடுக்கப்படுகின்றன. 2024ஆம் ஆண்டு சுதந்திர தினத்தை, வடக்கு கிழக்கு மக்கள், கரிநாளாக அனுஷ்டிக்க வேண்டும் என்று பல்கலைக்கழக சமூகங்களும் அரசியல் தலைவர்களும் அழைப்பு விடுத்திருந்தனர். அத்துடன் கிளிநொச்சியில் இரணைமடுவில் இருந்து கிளிநொச்சி நகரத்தின் மத்தியில் உள்ள டிப்போ சந்திவரையில் பேரணி ஒன்றுக்கான ஏற்பாடு இடம்பெற்றிருந்தது. இதனை தடுக்கும் விதமாகநீதிமன்றத்தால்யாழ்பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் கே. துவாரகன் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் பிரதிநிதிகள் உள்ளடங்கலாக ஐந்து நபர்களுக்கு தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

கிளிநொச்சியில் என்றுமில்லாத வகையில் சிறிலங்கா காவல்துறை அன்று குவிக்கப்பட்டனர் அல்லது திரண்டிருந்தனர். மிகப் பெரும் போர்க்களம் ஒன்றுக்கு தயாரானமை போன்று தண்ணீர் தாரை பிரயோக வாகனம், பேருந்துகள், மற்றும் கண்ணீர் புகை குண்டு ஆயுதங்களுடன் கிளிநொச்சி நகரத்தில் திரண்டிருந்த காவல்துறையினர் பின்னர் இரணைமடுச் சந்தியில் இருந்து தொடங்கும் போராட்டத்தை 155ஆம் கட்டைக்கு இடையில், விவசாயத் திணைக்களத்திற்கு அண்மையில் நகர்ந்து தடை அமைத்திருந்தனர்.

இந்த நிலையில் இரணைமடுச் சந்தியில் இருந்து போராட்டம் துவங்கி சில நிமிடங்கள் நகர்ந்த நிலையில், பொலிஸ ின் தடையைத்தாண்டிச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. அத்துடன் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள், மக்கள், மக்கள் பிரதிநிதிகள் மீது கடுமையான நீர்தாரைப் பிரயோகத்தை சிறிலங்கா காவல்துறையினர் நடாத்தியதுடன் கண்ணீர்புகை குண்டுத் தாக்குதலையும் நடாத்தினர். போராட்டத்தில் முன்னணியில் நின்ற மாணவர்கள் மீது தாக்குதல் நடாத்தியதுடன், அவர்களை கைது செய்யும் முயற்சிகளிலும் பொலிஸார் ஈடுபட்டனர். இதனை தடுக்க முற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மீதும் தாக்குதல் இடம்பெற்றது.

எனினும் அவர் மாணவர்களை தாக்கி கைது செய்யும் காவல்துறையினரை தடுத்து, மாணவர்களை காப்பாற்றும் முயற்சிகளில் களத்தில் முன்னின்று போராடியிருந்தார். அத்துடன் போராட்டத்தில் கலந்துகொண்ட சாள்ஸ் நிர்மலநாதன் மீதும் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இதன்போது யாழ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மூன்று மாணவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். தொடர்ந்து மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்காத வகையில் நகர்ந்து வந்த பேரணியை தடுத்து குழப்பத்தை காவல்துறையினர் ஏற்படுத்திய நிலையில், ஏ-9 பாதையின் போக்குவரத்து சில மணிநேரம் தடுத்து நிறுத்தப்பட்டது. பின்னதாக மாணவர்கள் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்காத வகையில் தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்டனர். நான்கு மணியளவில் கைது செய்யப்பட்ட மாணவர்கள் விடுவிக்கப்பட்டிருந்தனர். சிறிலங்கா சுதந்திரதினம் எமக்குக் கரிநாள், இனப்படுகொலைக்கு நீதியை வழங்கு, வடக்கு கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்திற்கு விடுதலை வேண்டும் உள்ளிட்ட கோசங்கள் போராட்டத்தில் முழங்கின.

வடக்கு கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தில் ஈழத் தமிழ் மக்கள் நிம்மதியாகவும் உரிமையுடனும் வாழ்கின்ற நாளே தமிழர்களுக்கு சுதந்திரதினம் என்பது போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் முதன்மைக் குரலாக வெளிப்படுத்தப்பட்டது. இதேவேளை இங்கு நடந்த தாக்குதல்களுக்கு மக்கள் பிரதிநிதிகள் பலரும் கண்டனம் தெரிவித்ததுடன், உலகமெங்கும் இருந்து இத் தாக்குதலை கண்டித்து கண்டனங்கள் எழத் துவங்குகின்றன.

சிறிலங்கா சுதந்திரதினத்தை முன்னிட்டு தமிழர் தாயகத்தில் உள்ள சில நகரங்களில் சிங்கக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. வவுனியா நகரத்தில் சிங்கக் கொடிகள் பறந்ததுடன், கிளிநொச்சி நகரத்திலும் இரவோடு இரவாக சிங்கக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. அத்துடன் அலுவலர்கள் இல்லாத அரச அலுவலகங்களிலும் அநாதரவாக ஸ்ரீலங்கா தேசியக்கொடி பறந்து கொண்டிருந்தது. சிறிலங்கா சுதந்திர தினத்தில் ஈழத் தமிழ் மக்கள் மீது அடக்குமுறையையும் ஒடுக்குமுறையையும் பிரயோகித்துக் கொண்டு, சிங்கக் கொடிகளை தாமாகவே ஏற்றிவிட்டுச் செல்லும் சிறிலங்கா அரசின் அணுகுமுறையை என்னவென்பது?

கடந்த காலத்தில் ஈழத் தமிழ் மக்கள் கொத்துக்கொத்தாக கொலைசெய்யப்படுகின்ற போது, எமது பிணங்கள் மீது இக்கொடிகள் ஏற்றுவிக்கப்பட்டதைப்போலவே இன்று எமது நகரங்களிலும் ஏற்றுவிக்கப்படுகின்றன. வடக்கு கிழக்கு மக்கள் அந்தக் கொடியை ஏற்றாமல் இருக்கும் வாழ்நிலையை சிங்கள தேசம் புரிந்து கொள்ள வேண்டும். சிறிலங்கா அரசு உணர்ந்து கொள்ள வேண்டும். ஈழத் தமிழ் மக்களின் வாழ்வில் சுதந்திரம் கிடைக்கும் வரையில் ஒவ்வொரு ஈழத் தமிழரின் வாழ்வும் புறக்கணிப்பும் போராட்டமாகவே தொடரப் போகிறது.

மக்களால் கொடிகளை ஏற்றாதிருக்க, தாமே கொடிகளை வடக்கு கிழக்கில் ஏற்றி சிறிலங்காவை தமிழர்கள் ஏற்றுக்கொண்டதாக காட்ட முற்படுவது பெரும் மோசடியல்லவா? சிறிலங்காவில் மிகப்பெரிய பொருளாதார நெருக்கடி நிலவுகின்றது. மக்கள் வாழ முடியாமல் நாட்டை விட்டு ஓடிக்கொண்டிருக்கிறார்கள். பிரித்தானியாவிடம் இருந்து ஸ்ரீலங்கா சுதந்திரம் பெற்றது. ஆனால் இன்று பிரித்தானியாவுக்கே பலர் ஓடிக்கொண்டிருக்கிறார்கள். பிரித்தானியா போன்ற நாடுகளிடம் சிறிலங்கா கையேந்திக் கொண்டிருக்கிறது.

அப்படிப்பார்த்தால் சுதந்திரதினத்தில் என்ன அர்த்தம் இருக்கிறது. பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் இன்னமும் விடுபட முடியாமல் விடுதலை பெற முடியாத நிலையிலும் ஈழத் தமிழர்களை ஒடுக்கி அழிப்பதில் சிறிலங்கா அரசு எத்தகைய குறியாக இருக்கிறது? இது மிகவும் அதிர்ச்சியூட்டும் கேள்வியல்லவா? இத்தகைய நிலையிலும் கொண்டாடப்படும் சுதந்திரதினத்தில் பெரும்செலவில் ஈழத் தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கும் சிறிலங்கா அரசுக்கு கண்ணுக்கு எட்டிய தூரத்தில் மீட்சியும் விமோசனமும் தென்படுமா? என்பது மக்கள் மத்தியில் ஒரு கேள்வியாக எழுப்பப்பட்டாலும் கூட தொடர்ச்சியாக இவ்வாறான போராட்டங்கள் ஆயுதப்போராட்டத்தின் மறுவடிவத்திற்கு வித்திடும் என்றே கூறலாம்.

வன்முறைகள் ஏன் தூண்டப்படுகின்றன? எதற்காக தூண்டப் படுகின்றன? எனபதை ஆராயவேண்டும். அரகல போராட்டம் என்பது மக்கள் புரட்சியின் ஒட்டுமொத்த வெளிப்பாடு. தெற்கில் ஒரு நீதி, வடக்கில் ஒரு நீதி என்று அரசாங்கம் பொறிமுறைகளை உருவாக்கி தமிழினத்தை கூறுபோடுகின்றது. தமிழினத்தின் விடுதலைப் போராட்டமானது கடந்த 30 வருட காலமாக இம்மண்ணில் இடம்பெற்றது நாம் அறிந்ததே. மாவிலாறில் ஆரம்பித்த போர் முள்ளிவாய்க்காலில் முடிவுற்றபோது இலட்சக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். இதற்கான முடிவு எட்டப்படவில்லை. கடத்தப்பட்டுக் காணாமல் போனார் தொடர்பில் முடிவுகள் எட்டப்படவில்லை. தமிழ் மக்களுக்கான சுயநிர்ணய உரிமை வழங்கப்படவில்லை. இந்த நிலையில் 76வது சுதந்திர தினத்தை தமிழ் மக்கள் கொண்டாடவேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.






மீண்டும் மீண்டும் தமிழினத்திற்கு எதிரான அடக்குமுறைகளை அரசு மேற்கொள்ளுமாகவிருந்தால் எந்தவொரு அரசும் ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்ள முடியாத நிலை உருவாகும். நவீன முறைக்கு ஏற்ப யுத்த சூழல் இந்த நாட்டில் ஏற்பட வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. தற்போதைய சூழலில் உக்ரைன் - ரஸ்யா மற்றும் இஸ்ரேல் - காசா யுத்தத்தை எடுத்துக்கொண்டால் அங்கு சிறுவர் துஸ்பிரயோகங்கள் மலிந்து காணப்படுகின்றது. ஆகவே தமிழினத்திற்கு நடந்த கொடுமைகளை சர்வதேசம் பார்க்கப்போவதில்லை. அஹிம்சை வழியிலான போராட்டங்களே இனி தமிழினத்திற்கானத் தீர்வினைப் பெற்றுக்கொடுக்க உறுதுணையாக இருக்கும் என்பதை தமிழினம் புரிந்துகொண்டு ஒற்றுமையாகச் செயற்படவேண்டும்.

**இரணியன்**

தினப்புயல்,
ஆசிரியர் பீடம்,
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை,
வவுனியா.

## சிங்கள ஆட்சியாளர்களும் தமிழ் மக்களும்

இலங்கை கடந்த பெப்ரவரி 04ஆம் திகதி தனது 76வது ஆண்டு சுதந்திர தின விழாவினை கொழும்பில் கோலாகலமாகக் கொண்டாடி மகிழ்ந்திருக்கிறது. ஆனால் இந்நாட்டில் வடக்கு கிழக்கினை பூர்வீகமாகக் கொண்டு வாழ்ந்துவரும் தமிழினம் சொல்லொனாத் துயரங்களைச் சுமந்தவர்களாக இன்றும் நீதி கோரிய போராட்டங்களை நடாத்திக் கொண்டிருக்கின்றனர். இலங்கையை ஆட்சி செய்த எந்தவொரு ஆட்சியாளரும் தமிழ் மக்கள் எதிர்கொண்ட பிரச்சினைகளுக்கானத் தீர்வுகளை வழங்க இதுவரை காலமும் முன்வரவில்லை. மாறாக தமிழினத்தின் இருப்பினை அழித்தொழிக்கும் வேலைத்திட்டங்களையே தொடர்ந்தும் செய்து வருகின்றனர்.

தேர்தல் காலங்களிலும், வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்தவுடனும் தமிழ் மக்களின் பிரதிநிதிகளை அழைத்து பேச்சு நடத்துவதும், பொய்யான வாக்குறுதிகளை வழங்கி தமிழ் மக்களின் வாக்குகளை சூறையாடுவதும் தெற்கின் சிங்கள ஆட்சியாளர்களின் நோக்கமாக இருக்கிறது. தமிழ் மக்களின் பிரதிநிதிகளுடன் நடாத்திய பேச்சுவார்த்தைகள் அனைத்தும் தோல்வியில் முடிவடைந்துள்ளன. செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்டும், கிடப்பிலும் போடப்பட்டன. சர்வதேச சமூகத்திற்கு அரசுகள் வழங்கிய வாக்குறுதிகள் காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளன. இனப் பிரச்சினைக்கானத் தீர்வினை ஒருபோதும் தெற்கின் ஆட்சியாளர்கள் வழங்கப் போவதில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

ஈழப் போராட்டத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள், சித்திரவதைகள், கொலைகள் இவைகளுக்கான நீதி இதுவரை கிடைக்கவில்லை. தமிழர் தாயகத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம், நிலக் கையகப்படுத்தல், பௌத்த விகாரைகளை அமைத்தல் தொடர்கிறது. ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் வடக்கு கிழக்கு மாகாணங்கள் அபிவிருத்தியில் தொடர்ந்தும் பின்தங்கியே காணப்படுகின்றன.


கடந்த 30 வருடங்களுக்கு மேலாக தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை என்கிற கொள்கைகளுக்காக கட்டமைப்பாக இருந்த தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள், 2009ஆம் ஆண்டு யுத்தம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் தற்போது பிளவடைந்து நிற்கின்றன. தமிழ் மக்கள் சிதைந்துபோயுள்ளனர். இந்த நிலைமை மாற்றம் பெறவேண்டும்.

கடந்த காலங்களில் தமிழ் மக்கள் கட்டமைப்பாக ஒருங்கிணைந்து இருந்ததைப் போல மீண்டும் ஒற்றுமைப்படவேண்டும். தமிழ் அரசியல் கட்சிகள் கடந்த காலங்களில் ஒருமித்துச் செயற்பட்டதைப் போல மீண்டும் ஒரு குடையின் கீழ் வரவேண்டும். பழைய அரசியல்வாதிகளால் இனி ஒன்றும் செய்ய முடியாது என்பது தற்போது நிரூபணமாகியுள்ளது. ஒரு மக்கள் இயக்கத்தைக் கட்டமைக்கவோ அல்லது கட்டிக்காக்கவோ, அரசியல் கட்சிகளை ஒருங்கிணைக்கவோ, தமிழ் மக்களின் பிரதேசங்களில் இடம்பெறும் அநீதிகளுக்கு எதிராக செயற்பாடுகளை முன்னெடுக்கவோ இவர்களால் இயலாமல் இருக்கிறது. இனி தமிழ் மக்கள் ஒரு கட்டமைப்பாக்கப்பட்ட அமைப்பாக உருவாகவேண்டும். அது தான் எமது பலம். மக்கள் இயக்கத்தின் மூலம் தான் இனிவரும் காலங்களில் நாம் எதனையும் சாதிக்கலாம்.



# 30

பல்துறை எழுத்தாளர்
புயல் பெ.ஸ்ரீகந்தநேஷன்



நீங்கயாராவது 'ரிங்' பண்ணுறவங்களா இருந்தா காசுக்குப் பதிலாக இரு போத்தல் தாறன்" - நேரடியாக விடயத்தை அவிழ்த்து விட்டான்.

நால்வரும் இதுவரைக் காலமும் மது பாவனைக்கோ, புகைத்தலுக்கோ பாவிக்கவும் இல்லை" அடிமையாகவும் இல்லை. சாராய முகவர் அவர்களைப் பார்த்து அவ்வாறு கேட்டது வெட்கமாகவும் தரக்குறைவாகவும் தென்பட்டது. இருந்தும் நால்வருக்கும் கை கடிக்கும் நிலையினால், சாராய போத்தல்களைக் காசுக்காக கப்பலில் கொண்டு செல்ல எல்லோருக்கும் விருப்பம். இருந்தும் சாத் சற்று முற்போக்குத் தனமாக சிந்தித்து, "நண்பர்களே, இதை அங்க கொண்டு போய் நாங்களே எத்தனைக் குடும்பத்தை கெடுத்து வீதிக்கு கொண்டு வரப்போறம். பணத்தைப் பார்த்து எங்கட சமூகத்திற்குத் துரோகம் செய்யப் போறம் இல்லையா?" - அரைகுறையான மனநிலையுடன் சிந்தனையைக் கிளறி விட்டான்.

"சாத் மச்சி, நீ சொல்லுறதும் சரிதான். எப்படியானாலும் யாராவது கொண்டுதானே போகப்போறங்க?" - வின்சன் கூறினான்.

"ஓமடா சாத்" - ஜெபி தலையாட்டினான்.

"எல்லோரிடமும் பணம் தட்டுப்பாடு. உடுப்பு பையைத் தவிர வேற சாமான்கள் இல்லை. என்ன எந்த நாளுமா கொண்டுப் போகப் போறம? படிக்க பணத்துக்காக இதை செய்தா தவறு இல்லை. நாங்க 4000 ரூபாய் காசு தேடுறதுனா எவ்வளவு நாளாகும்? பாவம் கஷ்டப்பட்ட பிள்ளைகள் - யாரும் தறவும் மாட்டாங்க இந்த காலத்தில்." - முரளி தனது வாதத்தை முன் வைத்தான்.

"முரளி, நீ சொல்லுறதும் சரி நாங்கள் எல்லாம் கஷ்டப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்ததால்தான், எங்கட அடிப்படைத் தேவைக்குக் கூட பணமில்லை. நேற்று பார் பணத்தப் பார்த்து, கட்சி அலுவலகத்திற்குச் சென்று பெரும்பாடு பட்டுப்போனன்" - பாதி மனதுடன், சாத் தன்னுடைய சம்மதத்தைத் தெரிவித்தான்.

"சாராயத்தைத் தூக்கக் கொடுத்து 'பணம் தேடக் கூடாது' - 'போடிங்கின்' மன்னாரில் தங்கிப் படிக்கேக்க 'பாதர்' செல்லித் தந்திருக்கிறார். இருந்தாலும் எங்களுக்குப் பணந்தான் தேவை. நாங்கள் குடிக்க கொண்டுபோக இல்லத்தானே." - வின்சன் தன் பக்கத்து நியாயத்தைத் தொடர்ந்தான்.

"நாங்க குடிக்காட்டி, குடிக்க வைக்கிறதும் பாவந்தான். இப்படி பார்த்தா இந்த உலகத்தில் எல்லாமே பாவந்தான். ஆபத்துக்கும்' தேவைக்கும் ஒருக்கா செய்ற செயலில் பாவம் ஒன்றும் பழிக்காது." - ஜெபிக்கு தேவாலயத்தின் மூலம் தெரிய வந்த வசனங்களை அள்ளி வீசினான்.

"இப்படி அலட்டிக் கொண்டு பொழுத போக்காம ஒரு முடிவுக்கு வாங்க." - என்றான், ஜெபி.

"யாருடா அலட்டுறது. இதைப் போய் அலட்டலுனு சொன்னா" அலட்டலை என்னன்னு சொல்லுறது. திரும்பிப் பாரு யாராவது இதைப் பற்றி கதைக்கிறாங்களானு. சத்தம் போடாம காசை வாங்குறாங்க, சாராயம் கொண்டு போக கொடுக்கிறவர்களிடம். மற்ற படி ஒரே ஊர் வம்புதான்." - சாத் தனல் தெறிக்க வசனங்களை உதிர்ந்தான்.

"கதையை நிப்பாட்டிப்போட்டு, நாங்க எல்லோரும் கொண்டு போவம். வறுமைக்கு பாவமில்லை. ஒரு முடிவுக்கு வாங்க." என்றான், வின்சன்.

"எங்கட சமயத்தில் 'முனிவரும் சாராயமும்' - ஒரு குட்டிக் கதையொன்று இருக்கு, அதைக் கேட்டுட்டு முடிவுக்கு வாங்க.

இரண்டு பக்கங்களும் நீண்ட அகன்ற ஆறுகளின் ஊடாக நீர் பாய்ந்து செல்கின்றது. நடுவே கிடையாக ஒற்றையடி வரம்பின் மேலாக பாதை செல்கின்றது. எதிர் எதிர் திசைகளில் கைக் குழந்தையுடன் ஒரு பெண்மணியும் தவத்தின் பொருட்டு வனத்திற்குச் செல்லும் முனிவரும் வருகின்றனர்.

இருவரும் நேருக்கு நேர் ஒருவரை ஒருவர் எதிர்ப்பட்டனர். அந்த பெண்மணி தவத்தின் பொருட்டு செல்லும் முனிவனைத் தன்னைத் தாண்டி போக விடவில்லை. முனிவரும் எவ்வளவோ முயற்சி செய்தும் அவள் விடவில்லை. பெண்மணியே ஏன் என்னைத் தடுத்து நிறுத்துகின்றாய்? - கேட்டார்.

முன்னொரு காலத்தில் தன்னுடைய கணவனுக்கு செய்த கொடுமைக்காக வேண்டி கணவனால், சபிக்கப்பட்டிருந்தாள். 'நீ ஒரு பிரமச்சாரியான ஆடவனுக்கு - முனிவனுக்கு உன் கரங்களினால், சாராய போத்தில் ஒன்று கொடுத்தால், மட்டுமே உனக்கு விமோசனம் கிடைக்கும்' என்று. இந்த சந்தர்ப்பத்தை அவள் தனக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொண்டாள்.

முனிவரே, உம்மைப் பார்த்தால், பிரமச்சாரி போல தெரிகின்றீர்கள். உங்களால், எனக்கு ஒரு உதவி தேவைப்படுகின்றது. பாவம் செய்ய வேண்டும். மூன்று பாவங்களில் ஒரு பாவமாவது செய்தால், போக விடுவேன். ஒன்று இந்த சாராய போத்திலை முழுமையாக குடிக்க வேண்டும். இரண்டு என்னைக் கற்பழிக்க வேண்டும். மூன்று இந்த சிசுவை ஆற்றில் வீசி கொல்லவேண்டும். ஏதாவது ஒன்றைச் செய்தால், அவரை போக விடுவதாக கூறினாள். அவளுடைய முடிவிலிருந்து சிறிதும் பின்வாங்கவில்லை.

முனிவரும் சிறிது நேரம் யோசித்தார். ஒரு முடிவுக்கு வந்தார். பிள்ளையைக் கொல்வது - பிள்ளைப் பாவம். பெண்மணியைக் கற்பழிப்பது - பெண்பாவம். அவற்றைச் செய்யாமல், சாராய போத்திலை குடித்துவிட்டு, அந்த இடத்திலிருந்து செல்ல தீர்மானித்தார். அவர் சாராய போத்திலை அவளிடமிருந்து வாங்கி, குடித்தார்.

முனிவருக்குச் சிறிது நேரத்தில் போதை தலைக்கு ஏறியதும், அந்த பெண்மணியிடமிருந்து சிசுவை பறித்தெடுத்து ஆற்றில் வீசினார் அது மீனுக்கு இரையானது. அந்த பெண்மணி அவருக்கு அழகிய காம தேவதைபோல தெரிந்தாள். அவளை இழுத்து கதற கதற கற்பழித்தார். இப்படி கதையில் வருகிற மாதிரி நடக்காட்டி சரி" - குட்டிக் கதையைக் கூறி, சிரித்தான், முரளி.

எல்லோரும் ஒரு முடிவுக்கு வந்தார்கள். ஒவ்வொருவரிடமும் சாராய முகவர் 4000 ரூபாய் பணத்தைக் கொடுத்தார். பணத்தை வாங்கியதும் நால்வரது முகமும் சிற்பிக்குள் முத்து தெரிவது போல் புன்னகித்தார்கள்.

"எப்படியும் உங்களுக்கு அடுத்த அடுத்த கிழமைக்கு 'டிக்கட்' வந்துரும்? கப்பல் ஏறேக்க போத்தில் 'பார்சுல்' தாறன்.

நால்வரதும் தேசிய அடையாள அட்டை எண்களையும் குறித்து கொண்ட, சாராய முகவர் அடுத்த மாணவர்களின் கூட்டத்தை நோக்கி நகர்ந்தார்.

"வாங்கடா போய் பார்ப்போம் 'டிக்கட்' எந்த நிலையிலிருக்கென்று" - கூறி ஜெபி புறப்பட, மூவரும் "ஓமடா" - பின்னால் புறப்பட்டனர்.

கச்சேரியின் முன்பக்கத்தில் தொங்க விடப்பட்டுள்ள குறிப்புக் பலகையில் கப்பல் 'டிக்கட்'க்கு பதிந்த ஒழுங்கில் எப்ப எப்ப வரும் - எழுதப்பட்டிருந்தன. நேற்று பதிந்தவர்களுக்கு இரண்டு வாரத்திற்குப் பின்னர் வந்து பார்க்கும் படி எழுதப்பட்டிருந்தது. அதைப்பார்த்த நால்வரும் மனதுக்குள் சினத்துக்கொண்டு வீதியின் பக்கமாக அவர்களது நடைப் பயணத்தை ஆரம்பித்தனர். வானில் சென்ற 'கிபீர்' விமானம் எங்கோ ஒரு மூலையில் சோடியாக பதிந்து குண்டுகளை வீசும் சப்தம் அது விழுந்து வெடிக்கும் சப்தம் - கூடி நின்ற மக்களைக் கிலி கொள்ள வைக்கின்றது. சாத்துக்கு வீட்டின் ஞாபகம் கடல் அலை கரையில் வந்து மோதுவது போல மோதுகின்றுது.

இலங்கையில் பிரசித்திப் பெற்ற ஆலயங்களில் திருக் கோணேஸ்வரமும் ஒன்று. இந்த ஆலயத்தைப் பற்றி புராண - இதிகாச - செவிவழி கதைகள் பல உள்ளன. சாத்தைப் பொறுத்தவரையில், ஈழத்துப் பஞ்ச ஈச்சரங்களில் ஒன்று எனவும் இந்தியாவில் வாழ்ந்த சமயக்குரவர்களால், தேவாரம் பாடப்பெற்ற தலம் எனவும் பிரசித்தி பெற்ற இராவணன் வெட்டு உண்டெனவும் புத்தகங்களின் வாயிலாகவும் செவிவழியாகவும் அறிந்திருந்தான்.

'திருக்கோணமலைக்கு வந்ததே வந்தாச்சி, எப்படியும் திருக்கோணமலை கடற்கரையையும் (Beach) கோணேஸ்வர ஆலயத்தையும் பார்த்து விட்டுத்தான் கப்பல் ஏறுகின்றது?' - திடசங்கற்பம் பூண்டிருந்தான். அது இன்று பின்னேரப் பொழுதில் சாத்திற்குக் கைகூடி விட்டது.

# தமிழரசுக் கட்சி வேண்டுமாயின் DTNAவுடன் இணைந்து செயற்படலாம் – சுரேஸ் பிரேமச்சந்திரன்




தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் தெரிவு என்பது உட்கட்சிக்குரிய விடயம். அது சாதாரணமாக அவர்களது கட்சியில் இதுவரை காலமும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்ட விடயமாக இருந்தது. தற்போது அந்தப் பதவிக்கு போட்டி ஏற்பட்டு அந்தப் போட்டியின் ஊடாக தெரிவுசெய்யப்படவேண்டும் என்கிற நிர்ப்பந்தத்தை கட்சிக்குள் இருப்பவர்களே தோற்று வித்திருக்கிறார்கள்.

இதன் காரணமாக இருவருக்கும் இடையிலான ஏட்டிக்குப் போட்டியான பிரச்சாரங்களில் ஈடுபட்டுள்ளார்கள். ஒருவருக்கு ஒருவர் மீதான குற்றச்சாட்டுக்கள், சேறடிப்புக்கள். இந்தக் குற்றச்சாட்டுக்களைப் பார்த்தால் இருவரும் எதிர்காலத்தில் இணைந்து பயணிக்க முடியாதளவுக்கு சென்றுள்ளதைப் பார்க்க முடிகிறது. இந்தக் குற்றச்சாட்டுக்களை இருவரும் ஏற்றுக்கொண்டால் இணைந்து வேலை செய்ய முடியாது. அவ்வளவு தூரத்திற்கு அந்தக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளது.

அந்தக் குற்றச்சாட்டுக்களை சுமத்துகிறபோது இவர்கள் ஜனநாயகத்தினுடைய உயர் மட்டத்தில் தாங்கள் இருப்பது போலவும், எந்தவொரு கட்சியும் ஜனநாயகபூர்வமாக தங்களது தலைவரைத் தெரிவுசெய்யவில்லை என்பதுபோலவும் தாங்கள் தான் ஜனநாயகத்திற்குள் ஊறிப்போய் உள்ளதாகவும் ஒரு மாயையை மக்கள் மத்தியில் உருவாக்கியுள்ளார்கள். இது மாயையே தவிர உண்மையான விடயங்கள் எதுவும் இல்லை.



அதாவது ஒரு தலைவர் தெரிவை ஏகமனதாக தெரிவுசெய்ய முடியாத ஒரு காரணத்தினால் ஏகமனதாக தெரிவுசெய்யக்கூடிய உள்ளார்ந்த உணர்வுகள் இல்லாத ஒரு காரணத்தினால் தான் இந்தப் போட்டி வந்தது. அந்தப் போட்டிக்கு அவர்கள் சூட்டிக்கொண்ட பெயர் தான் ஜனநாயகம். இந்தப் பெயரைச் சூட்டிக்கொண்டு இவர்கள் செய்த வேலை சேறடிப்பு. அந்தச் சேறடிப்புக்களின் மூலம் போட்டி வைத்து தற்போது ஒருவர் வெற்றி பெற்றிருக்கிறார். அடுத்த கட்டமாக அவர் ஏனைய கட்சிகளுக்கு அழைப்பு விடுத்திருக்கிறார். அதாவது 2009ஆம் ஆண்டுக்கு முன்பு இருந்ததைப்போல கொண்டுசெல்லப்போகிறேன் என்கிறார்.

2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் என்ன இருந்தது. 2002 ஆம் ஆண்டளவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. விடுதலைப்புலிகள் அந்தக் காலகட்டத்தில் இருந்தார்கள். அவர்களும் இணைந்து உருவாக்கினார்கள். 2009 ஆம் ஆண்டு இருந்த அரசியல் சூழ்நிலை அல்ல தற்போதிருப்பது. அன்று விடுதலைப்புலிகள் இராணுவப் பலம் வாய்ந்த ஒரு சக்தியாக இருந்தார்கள். அவர்களுக்கு ஆதரவாக அரசியல் சக்தியை உருவாக்கவேண்டிய தேவை இருந்தது. அதன் பிரகாரம் அந்த விடயங்கள் நடந்தது.

இன்று இராணுவப் பலமும் இல்லை ஒன்றுமில்லை. ஆகவே இன்று இந்த விடயங்களை எவ்வாறு கொண்டுசெல்வது என்பது தீர்க்கமாக சிந்திக்கக்கூடிய விடயம். மாவீரர் துயிலுமில்லத்தில் சென்று சிறீதரன் அவர்கள் விளக்கேற்றிதனது கடமைகளை ஆரம்பித்திருப்பதாக செய்திகளில் பார்த்தேன். அது தவறு ஒன்றுமில்லை. அவர் அங்கு செல்லலாம். விளக்கினை ஏற்றி வழிபாடும் செய்யலாம். ஆனால் வெளியில் உள்ள கருத்தோட்டம் அவர் தன்னை ஜனநாயகப் போராளியாக, ஜனநாயகவாதியாகக் காட்டிக்கொண்டாலும் விடுதலைப் புலிகளின் வழி வந்த கடும்போக்காளராக தன்னை காட்டிக்கொள்ள முயற்சிக்கின்றார். அதில் உண்மையில்லை என்பது எங்களுக்குத் தெரியும். ஆனால் அது புலம்பெயர்ந்த அல்லது இங்கிருக்கக்கூடிய மக்களின் கவர்ச்சிக்காக செய்த விடயமாகத்தான் எனக்குத் தெரிகிறது.

எனவே தற்போது இவர் ஏனைய கட்சிகளை அழைத்திருக்கக்கூடிய விடயமானது. தமிழ்த் தேசிய பரப்புக்குள் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி என்கிற ஐக்கிய முன்னணி இருக்கிறது. அதில் ஈ.பி.ஆர்.எல்.எப். ரெலோ, புளொட், விடுதலைப்புலிகளைச் சேர்ந்த ஜனநாயகப் போராளிகள் இருக்கிறார்கள். சிறிகாந்தா தலைமையிலான தமிழ்த் தேசியக் கட்சி இருக்கிறது. இந்த ஐந்தும் பதிவு செய்யப்பட்ட ஒரு ஐக்கிய முன்னணியை உருவாக்கி அவர்களுக்கென்று ஒரு யாப்பு இருக்கிறது. அதற்குப் பெயர் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி என இருக்கிறது. குத்துவிளக்கு என்கிற சின்னம் இருக்கிறது. அவர்கள் தங்களுக்கான ஒரு கட்டமைப்பை உருவாக்கியிருக்கிறார்கள்.

நிறைவேற்றுக்குழு இருக்கிறது. மாவட்ட மட்டத்தில் குழுக்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். யாப்பின் அடிப்படையில் வேலைத்திட்டங்கள் நடைபெறுகிறது. இவை எதுவும் முன்னர் இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இருக்கவில்லை. இப்போதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற ஒன்று இல்லை. தற்போது வெறுமனே தமிழரசுக் கட்சி தான் இருக்கிறது.

அதாவது கடந்த முறை உள்ளூராட்சி சபைகளுக்கானத் தேர்தல் வரப்போகிறது என்றவுடன் தாங்கள் தனித்துத் தேர்தல் கேட்பதாகக் கூறி கூட்டமைப்பிலிருந்து வெளியேறி தனித்து தேர்தல் கேட்டவர்கள் தான் இவர்கள். ஆகவே தற்போது தமிழரசுக் கட்சி என்பது தனித்து வீடு சின்னத்தில் இருக்கிறது. அனைவரும் ஐக்கியப்பட்டு பயணிக்கும் விருப்பம் புதிய தலைவருக்கு இருக்குமாகவிருந்தால் ஏற்கனவே இருக்கின்ற இந்த ஜனநாயக தேசியக் கூட்டணியில் இணைந்துகொள்ள முடியும். அது சம்பந்தமாக ஜனநாயக தமிழ்தேசியக் கூட்டணியுடன் பேச்சுக்களை நடத்தலாம். அதில் மாற்றங்கள் செய்யவேண்டுமாகவிருந்தால் தங்களது ஆலோசனைகளைக் கூறலாம். அது சரியாக இருக்குமாயின் நாங்கள் அதுபற்றி ஆலோசிக்கலாம்.

தமிழ் மக்களுடைய விடுதலையைப் பெற்றுக் கொள்வதற்கு ஒரு வலுவான அமைப்பினை உருவாக்கவேண்டும் என்றால் தற்போதிருக்கும் இந்தக் கூட்டணியுடன் வந்து இணைவதுதான் சரியானதாக இருக்கும். இதைவிடுத்து புதிதாக வந்து ஏதோ செய்யப்போகின்றோம் எனக் கூறுவதெல்லாம் என்னைப் பொறுத்தவரையில் நடைமுறையில் சாத்தியமில்லாத விடயம்.

ஏனென்றால் ஏற்கனவே தமிழரசுக் கட்சி ஒரு முடிவு எடுத்திருக்கிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒருநாளும் பதிவுசெய்யமாட்டோம் என்பது அங்கிருக்கின்ற சம்பந்தன் மற்றும் மாவை சேனாதிராஜா உட்பட எடுத்த முடிவு. அப்படியிருக்கின்றபோது பதிவு செய்யப்படாத, கூட்டமைப்பாக இல்லாத தமிழரசுக் கட்சியில் அங்கம் வகிக்க கேட்கப்போகின்றபோது அது எதுவும் நடைமுறைச் சாத்தியமில்லை. ஆகவே சிறீதரன் ஐக்கியத்துடன் இருக்கிறார், ஈடுபாட்டுடன் இருக்கிறார், அதனை நம்புகிறார் என்றால் ஏற்கனவே ஒரு வருடத்திற்கு மேலாக யாப்புடன் இயங்கக்கூடிய இந்தக் கூட்டணியில் வந்து இணைவது தான் பொருத்தமானதாக இருக்கும்.



# சிங்களப் பேரினவாதிகள் ஒருபோதும் தமிழினத்திற்கு சுதந்திரத்தை வழங்கப்போவதில்லை



ஒரு நாட்டினுடைய சுதந்திரம் என்பது இந்த நாட்டில் வாழ்கின்ற அனைத்து பிரஜைகளாலும் அனைத்து இன மக்களாலும் கொண்டாடப்படவேண்டிய சுதந்திர வேட்கை மிக்க ஒரு நாள். ஆனால் இலங்கையின் வரலாற்றைப் பொறுத்தவரை *1948* ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்ததாகக் கருதப்பட்டாலும் 1956ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து இலங்கையின் சுதந்திரத்தின் மீது தமிழர்கள், தமிழ் மக்கள் நம்பிக்கை கொண்டவர்களாக அல்லது விசுவாசம் கொண்டவர்களாக இருந்ததில்லை.

உதாரணமாக, 1957ஆம் ஆண்டு பெப்ரவரி 04ஆம் திகதி திருகோணமலையில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடந்தது சுதந்திர தினத்திற்கெதிராக. வடகிழக்கில் இருக்கின்ற அனைத்து மாவட்டங்களிலும் இந்த சுதந்திர தினத்திற்கு எதிரான மாபெரும் போராட்டம் நடந்தது. தந்தை செல்வநாயகம் அவர்கள் உட்பட பலர் இந்த சுதந்திர தினத்தை பகிஸ்கரிக்கக்கோரிய நிலையில் தான் திருகோணமலையில் நடராஜன் என்பவர் மணிக்கூட்டு கோபுரத்திற்கு மீது ஏறி சுதந்திரக் கொடி சம்பந்தமாக சுட்டுக்கொல்லப்பட்டார். அதைத்தொடர்ந்து 1972ஆம் ஆண்டு குடியரசு யாப்பு என்று கூறப்படுகின்ற யாப்பு திருமதி.சிறிமாவோ பண்டாரநாயக்கா அவர்களால், அவரது அரசால் உருவாக்கப்பட்ட வேளையில் வடகிழக்கில் இந்த சுதந்திர தினத்தை கடுமையாக எதிர்த்தார்கள்.

காரணம் தமிழ் மக்களுடைய அடிப்படை உரிமைகள் - சுதந்திர உரிமைகள் வழங்கப்படவில்லை, சிங்கள அரசாங்கங்களால் வழங்கப்படவில்லை. பல்வேறு விதமான அலட்சியங்கள், அட்டூழியங்களுக்கு மத்தியில் தமிழ் மக்கள் இருக்கின்றார்கள் என்கிற காரணத்தின் காரணமாகவே இந்த சுதந்திர தினத்தை பகிஸ்கரிக்கின்ற போக்கு கடந்த 76 வருடங்களாகவே இடம்பெற்றுவருவதை நாங்கள் அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

ஒரு நாட்டினுடைய சுதந்திரம் என்பது இந்தியாவினுடைய சுதந்திரம் ஆக இருக்கலாம். அமெரிக்காவினுடைய சுதந்திரமாக இருக்கலாம் அல்லது வேறு ஒரு நாட்டினுடைய சுதந்திரமாக இருக்கலாம். வாழ்கின்ற அனைத்து இன மக்களும் சுதந்திர வீட்டில் ஒரு தாகத்தோடு கொண்டாடப்படவேண்டிய விடயம். இலங்கையில் அவ்வாறு இல்லாத ஒரு சூழ்நிலை காணப்படுகிறது. சுதந்திரக் கொடியின் மீது நம்பிக்கை இழந்தவர்களாக, சுதந்திர கீதத்தின் மீது நம்பிக்கையிழந்தவர்களாக, தேசிய கீதத்தின் மீது விருப்பம் இல்லாதவர்களாக காணப்படுவதற்கு காரணம் தமிழ் மக்களுடைய அரசியல் உரிமைகளுக்கு விடிவு கிடைக்காத காரணத்தினாலேயே இந்த நிலை இங்கு காணப்படுகின்றது. இந்த நிலை மாற்றப்படவேண்டுமாகவிருந்தால் தமிழ் மக்களுடைய நீண்டகால தேசியப் பிரச்சினைக்கு, அரசியல் பிரச்சினைக்குஒருஆழபூர்வமானதீர்வு கிடைக்கும் பட்சத்தில் அவர்களும் சேர்ந்து கொண்டாடுவார்கள் என்கிற நம்பிக்கை எல்லோரிடத்திலும் இருக்கின்றது என்று கூறலாம்.

உண்மையில் சில சமயங்களில் சில காலப்பகுதிகளில் சில வேளைகளில் தமிழ்த் தரப்பில் பலர் தமிழ்த்தரப்பைச்சேர்ந்தவர்கள்தமிழ்த் தேசியத்தை நேசிக்கின்றவர்கள் கூட சில சந்தர்ப்பங்களில் அரசாங்கத்துடன் இணைந்து தேசிய தினத்தை அனுஸ்டித்த சம்பவங்கள் இலங்கையில் இடம்பெற்றிருக்கின்றது. ஆனால் ஒட்டுமொத்தமாகப் பார்க்கின்றபோது பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு இடங்களில் எந்தவொரு காலப்பகுதியிலும் குறிப்பாக 1948ஆம் ஆண்டுக்குப் பிறகு கொண்டாடப்பட்ட அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் தமிழ்த் தேசியத்தை நேசிக்கின்றவர்கள் அல்லது தமிழ்த் தேசியம் கொண்டுவரப்படவேண்டும் என்பதை ஆதரிக்கின்றவர்கள் இலங்கையினுடைய சுதந்திரத்தை சந்தோசமாக கொண்டாடியதாக இல்லை. கொண்டாட விரும்புவதாகவும் இல்லை. ஆகவே சில சந்தர்ப்பங்களில் சில அரசாங்கங்களுடன் இணைந்து தங்களது வாய்ப்புக்காகவும் வசதிக்காகவும் தங்களது தேவைக்காகவும் கொண்டாடுகின்ற நிலைமைகள் தற்போது மாறுபட்டிருக்கின்றது.

பொதுவாகவே தமிழ்த் தேசியத்தை ஆதரிக்கின்ற அனைத்துக் கட்சிகளும் அல்லது அனைத்துத் தரப்பினரும் சுதந்திர தினத்தை ஒரு கரி நாளாகக் கொண்டாடவேண்டிய அந்த தேவையை அவர்கள் உணர்த்தியிருக்கிறார்கள். காரணம் தமிழ் மக்கள் சுதந்திரமாக இங்கு வாழவில்லை. அவர்களுடைய தேசிய அரசியல் பிரச்சினைக்கு தீர்வு காணப்படவில்லை. தொல்பொருள் திணைக்களத்தினுடைய அட்டூழியங்கள், காணி விவகாரங்கள், அரசியல் கைதிகளின் விவகாரங்கள், காணாமல்போனோர் என்று கூறப்படுகின்றஏகப்பட்ட விடயங்களில் நாங்கள் பல்வேறு தாக்கங்களுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்ற ஒரு சூழலில் இதை சந்தோசமாக கொண்டாட முடியவில்லை என்று கூறப்படுகின்ற அந்த ஆதங்கத்தைத் தான் அவர்கள் வெளிக்காட்டியிருக்கின்றார்கள்.

மாகாண சபை என்பது தமிழ் மக்களுடைய இனப்பிரச்சினைக்கான ஒரு முழுமையான தீர்வாக கொள்ளப்படவுமில்லை, கொள்ள நினைக்கவுமில்லை. 1987ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட மாகாண சபை, 1989ஆம் ஆண்டு தேர்தல் நடாத்தப்பட்டு வடகிழக்கு இணைந்த ஒரு மாகாண சபை உருவாக்கப்பட்டது. அவ்வாறு உருவாக்கப்பட்டபோது 13வது திருத்தத்தில் கூறப்பட்டிருக்கின்ற காணி அதிகாரம், பொலிஸ் அதிகாரம் தொடர்பாக அந்த அதிகாரங்கள் எங்களுக்கு வழங்கப்படவேண்டும் என்கிற நிலை காரணமாக, முதலமைச்சராக இருந்த திருவாளர் வரதராஜப்பெருமாள் அவர்கள் இந்தியாவின் ஊடாக இலங்கைக்கு பல்வேறுவிதமான அழுத்தங்களைப் பிரயோகித்திருக்கிறார்.

திரு.ராஜீவ் காந்தி அவர்கள் மாகாண சபையைப் பெற்றுத்தந்திருந்த வேளையில் இதுவொரு ஆரம்பப்புள்ளியாக எடுத்துக்கொள்ளுங்கள். அதாவது இலங்கை யாப்புக்குக் கீழ் உருவாக்கப்பட்டுள்ள சமஸ்டி முறையிலான ஒன்றாக இல்லாமல், ஒருமித்த யாப்புக்குக் கீழ் ஒரு தனியான யாப்புக்குக் கீழ் உருவாக்கப்பட்ட ஒரு சிறிய சுதந்திரமாக ஆலோசனையாக நீங்கள் கொள்ளலாம். உரிய காலத்தில் பெற்றுத்தர முடியும் என்கிற விபரங்களை அவர் அப்போது ஆட்சியிலிருந்த ஈ.பி.ஆர்.எல்.எப், ஈ.என்.டி.எல்.எப் போன்ற கட்சிகளுக்கு கூறியிருக்கிறார்.

ஆனால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் 13வது திருத்தச்சட்டத்தில் கூறப்பட்டிருக்கின்ற காணி அதிகாரம் மிக மிக முக்கியமானது. 1948ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக காணிப் பிரச்சினைகள் நீட்சியாக வருகிறது. பொலிஸ் அதிகாரம் என்பது வடகிழக்கில் வாழ்கின்ற மக்கள் தங்களைத் தாங்களே பாதுகாக்கக்கூடிய ஒரு உரிமையாக ஒரு அதிகாரம் நிறைந்ததாக உண்டாக்கப்படவேண்டும் என்பதற்காகவே பொலிஸ் அதிகாரத்தைக் கோரினார்கள்.

ஆனால் இலங்கை அரசாங்கம் அதற்குப் பின்னர் வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவாக இருக்கலாம், பிரேமதாசாவாக இருக்கலாம் அல்லது அதற்குப் பின் வந்த சிங்களத் தலைமைகளாக இருக்கலாம் அவர்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இந்த இரு விடயங்களையும் மாகாண சபைகளுக்கு வழங்குவதற்கு தயாராகவில்லை. தென்னிலங்கை சமூகமும் தயாராகவில்லை.

அவ்வாறான சூழலில் மாகாண சபை என்பது ஒரு ஒற்றையாட்சிக்குக் கீழ் உருவாக்கப்பட்ட ஒரு அதிகாரம். ஒரு அதிகாரப் பகிர்வு. 1948-1949 தந்தை செல்வநாயகம் தொடக்கம் அல்லது விடுதலைப் போரில் ஈடுபட்டவர்கள் வரை கூறியது என்ன? வடகிழக்கு இணைந்த முறையில் ஒரு நிறைவான அதிகாரத்துடன் கூடிய ஒரு ஆட்சிமுறை, ஒரு சுயாட்சி முறை, சுயநிர்ணய முறை தமிழ் மக்களுக்கு கொண்டுவரப்படவேண்டும் என்று கூறப்படுகின்ற விடயத்தில் அவர்கள் போராட்டம் நடத்தினார்கள்.

அகிம்சை போர் நடத்தப்பட்டது. ஆயுதப் போர் நடத்தப்பட்டது. அதேபோல இராஜதந்திரப் போர் நடத்தப்பட்டது. இந்தப் போர்கள் நடத்தப்பட்டும் கூட தென்னிலங்கை அரசியல் தலைமைகள் தமிழ் மக்களுடைய நீண்டகால பிரச்சினைக்கு தீர்வு காணுவதற்கு முயலவில்லை. இவ்வாறு இருக்கின்றபோது மாகாண சபை என்பது எவ்வாறு எத்தகைய தன்மையில் தமிழர்களுக்குரிய அரசியல் தீர்வாகக் கொள்ள முடியும். அது பச்சைத்தனமான பொய். அது மாத்திரமல்ல, 2006 ஆம் ஆண்டு வடகிழக்கு இணைக்கப்பட்ட முறை தவறு என்று கூறப்படுகின்ற தீர்ப்பை அப்போதைய பிரதம நீதியரசர் வழங்கியிருந்தார். அதனை இணைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும் கூட அது முடியாமல் போய்விட்டது.

1988-1989 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து 2006 ஆம் ஆண்டுவரை வடகிழக்கு இணைந்த முறையில் இருந்தது. மீண்டும் திட்டமிட்ட வகையில் வடகிழக்கு பிரிக்கப்பட்டது. வடகிழக்கு இணையவேண்டுமாகவிருந்தால் ஒரு பொது வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என்று கூறினார்கள். அதனை ஜே.ஆர் அவர்களோ, பிரேமதாசாவோ அல்லது அதற்குப் பின்னால் வந்த எவருமே நடத்த முற்படவில்லை. காரணம் வடகிழக்கு இணையக்கூடாது. தமிழ் மக்களுடைய கலாச்சார பாரம்பரியங்கள், தாயகம் என்று கூறப்படுகின்ற விடயங்களை மனதிற்கொண்டு இவை இணைக்கப்படக்கூடாது என்பதில் கவனமாக இருந்தார்கள்.

எங்கள் அனைவருக்கும் தெரியும் திம்பு பேச்சுவார்த்தை, வடகிழக்கு இணைப்பு என்று கூறப்படுகின்ற விடயம் மிகப் பிரதானமான விடயமாக பேசப்பட்டது. ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவிற்கு அது இடித்துரைக்கப்பட்டது. சர்வதேச ரீதியாக கூறப்பட்டது. அவ்வாறு இருக்கின்றபோது வடகிழக்கு தாயகம் இணைக்கப்படாமல் போதிய அரசியல் அந்தஸ்து இல்லாமல் சமஸ்டி வகையிலான ஆட்சி முறை இல்லாமல் மாகாண சபைகள் என்பது "ஆனைப்பசிக்கு சோளப்பொறி" போட்ட விடயமாகவே அமைகின்றது.

**திருமலை நவம்**

# பல சவால்களுக்கு மத்தியில் சிறீதரன்



தமிழரசு கட்சிக்குள் நடந்த தேர்தல் ஏன் முக்கியத்துவமுடையது? செல்வநாயகம் தமிழ் மக்களைக் கடவுளிடம் ஒப்படைத்த பொழுதே அக்கட்சி செயல்பூர்வமாக இறந்து போய்விட்டது. அப்படிப்பட்ட ஒரு கட்சிக்கு யார் தலைவராக வந்தாலும் எதுவும் நடக்கப் போவதில்லை என்று ஒரு விமர்சனம் சமூக வலைத்தளங்களில் வைக்கப்படுகின்றது. கோட்பாட்டு ரீதியாக அது சரி. ஆனால் நடைமுறையில் தமிழரசுக் கட்சி இப்பொழுதும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. உள்ளதில் பெரிய கட்சி அது. தமிழ் மக்கள் மத்தியில் மக்கள் இயக்கம் எதுவும் கிடையாது. இருக்கின்ற கட்சிகளின் பிரதிநிதிகள்தான் தமிழ் அரசியலை முன்னெடுக்கின்றார்கள். அரசியல் என்பது சாத்தியக்கூறுகளின் கலை. இருப்பதை வைத்துத்தான் அரசியல் செய்யலாம். இருப்பதை வைத்துத்தான் அரசியலை எழுதலாம். கற்பனைகளில் இருந்தோ அல்லது விருப்பங்களில் இருந்தோ அரசியலை ஆய்வு செய்ய முடியாது. உள்ளதில் பெரிய கட்சி. அதற்குள் நடக்கும் தேர்தல் என்று பார்க்கும்பொழுது தமிழரசு கட்சிக்குள் நடக்கும் தேர்தலுக்கு முக்கியத்துவம் உண்டு.

அதே சமயம் அது தமிழ் அரசியலின் இயலாமையைக் காட்டும் ஒரு தேர்தல் என்பதிலும் சந்தேகம் இல்லை. ஏனென்றால் தமிழ் அரசியல் கட்சி மையதேர்தல் மைய அரசியலாகச் சுருங்கியோ இருப்பதை அது காட்டுகின்றது. இது முதலாவது காரணம். இரண்டாவது காரணம், தமிழரசுக் கட்சியின் ஆங்கிலப் பெயர் சமஸ்டி கட்சி. அதற்கு இப்பொழுது 73 வயது. 73 ஆண்டுகளாக கட்சி தன் பெயரில் வைத்துக் கொண்டிருக்கும் சமஸ்டியை அடைய முடியவில்லை. எனவே அதன் தேர்தல் வாக்குறுதிகள், இலட்சியங்கள் என்பவற்றின் அடிப்படையில் சொன்னால், தமிழரசுக் கட்சி ஒரு தோல்வியுற்ற கட்சி. அதன் புதிய தலைவர் கட்சியை வெற்றிப் பாதையில் செலுத்துவாரா? அதற்கு என்ன செய்ய வேண்டும்?

அவர் கடந்த 73 ஆண்டு கால தோல்விகளிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டும். அதுபோல, அண்மையில் கட்சிக்குள் நடந்த தேர்தலில் இருந்தும் கற்றுக்கொள்ள வேண்டும். 73 ஆண்டு கால தோல்விக்குக் காரணம் தமிழரசுக் கட்சியிடம் பொருத்தமான வினைத்திறன் மிக்க வழிவரைபடம் இருக்கவில்லை என்பதுதான். விக்னேஸ்வரன் கூறுவது போல எல்லாருமே சமஸ்டிப் பண்புடைய தீர்வைதான் கேட்கின்றார்கள். ஆனால் ஒருவரிடமும் சமஷ்டிக்கான வழிவரைபடம் கிடையாது. சமஸ்டியை எப்படி அடைவது?

நிச்சயமாக நாடாளுமன்ற அரசியலுக்கு ஊடாக மட்டும் அடைய முடியாது. நாடாளுமன்ற அரசியலுக்கு வெளியே ஒரு மக்கள் இயக்கம் தேவை. அதே சமயம் அந்த மக்கள் இயக்கத்தின் வழிநடத்தலின் கீழ் பொருத்தமான ஒரு வெளிவிவகாரக் கொள்கையை முன்னெடுக்கும் வினைத்திறன் மிக்க ஒரு வெளிவிவகாரக் கட்டமைப்பு வேண்டும். ஏனென்றால், எல்லாத் தேசிய இனப் பிரச்சினைகளும் சாராம்சத்தில் பிராந்திய மற்றும் அனைத்துலகப் பிரச்சினைகள்தான். அவற்றுக்கு அனைத்துலகத் தீர்வுதான் உண்டு. அவை உள்நாட்டுப் பிரச்சினைகள் அல்ல. உள்நாட்டுப் பிரச்சினை ஒன்றை வெளிநாடுகள் கையாளும்போது அது அனைத்துலகப் பரிமாணத்தைப் பெறுகின்றது. எனவே வெளிநாடுகளின் அழுத்தத்தால்தான் அதற்குத் தீர்வு வரும். இந்த அடிப்படையில் பார்த்தால், வெளிநாடுகளைக் கையாள்வதற்குத் தேவையான பொருத்தமான வினைத்திறன்மிக்க ஒரு வெளியுறவுத் தரிசனமும் வெளியுறவுக் கட்டமைப்பும் வேண்டும். தமிழ் அரசியலில் அப்படியேதும் உண்டா?

தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் இந்தச் சவால்களை எதிர்கொள்ள வேண்டும். சிறீதரன் இப்பொழுது ஒரு மாவட்டத்தின் பிரதிநிதி மட்டுமல்ல. அவர் ஒரு கட்சியின் தலைவர். எனவே மூன்று தளங்களில் அவர் ஒருங்கிணைப்பைச் செய்ய வேண்டும். முதலாவதாக, கட்சிக்குள் ஐக்கியத்தை ஏற்படுத்த வேண்டும். தேர்தலின் விளைவாக கட்சி துருவமயப்பட்டிருக்கிறது. இரண்டு பகை அணிகளையும் ஒன்றாகச் சேர்ந்து செயல்படும் ஒரு சூழலை ஏற்படுத்த வேண்டும். தேர்தலை நடத்தி ஒரு தலைவரை தேர்வு செய்த விடயத்தில் தமிழரசு கட்சி ஒரு முன்னுதாரணத்தை ஏனைய கட்சிகளுக்குக் காட்டியிருக்கின்றது. பெருமளவுக்கு பரம்பரை பரம்பரையாக வரும் தலைவர்களையும் கேள்விக்கிடமற்ற தலைவர்களையும் கொண்ட ஒரு பிராந்தியத்தில், தமிழரசுக் கட்சியின் முன்னுதாரணம் ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளும் பின்பற்றவேண்டிய ஒன்று. தேர்தலில் தோற்ற தரப்பு கட்சியை விட்டு வெளியேறினால், அந்தத் தேர்தல் மூலம் வெளிப்படுத்தப்பட்ட ஜனநாயக மாண்பு சிதைந்து விடும். சுமந்திரன் அனைத்துலகத் தொடர்புகளை அதிகமாக வைத்திருப்பவர். அது ஒரு வளம். ஒரு வெளியுறவுக் கட்டமைப்புக்குள் அவருக்கு முக்கிய இடம் கொடுக்கப்பட வேண்டும். ஆனால் ஒரு வெளியுறவுக் கொள்கைக்கு அவர் பொறுப்புக்கூற வேண்டும்.

ஒரு தேர்தலை நோக்கி நிலைமைகளை நகர்த்தியவர் அவர்தான். ஏனெனில் வெற்றி தனக்கே என்று அவர் திட்டவட்டமாக நம்பினார். அதற்காக அவர் பல ஆண்டுகள் உழைத்துமிருக்கிறார். சிறீதரன் அவமானகரமான ஒரு தோல்வியைத் தழுவுவார் என்று சுமந்திரனின் ஆதரவாளர்கள் தொடக்கத்தில் நம்பினார்கள். ஆனால் சிறீதரன் கடுமையாக உழைத்தார். அவருடைய பிரதான பலம் கிளிநொச்சியில் இருக்கின்றது. அதோடு, மட்டக்களப்பு தொடக்கத்திலிருந்து அவரோடு நின்றது. சிறுதொகுதி உறுப்பினர்கள் சாணக்கியனோடு நின்றார்கள். ஏனையவர்கள் திட்டவட்டமாக சிறிதரனை ஆதரித்தார்கள். வெற்றிக்குரிய அடிப்படை வாக்குகளில் மட்டக்களப்பு வாக்குகள் உண்டு.

அடுத்தது, யாழ்ப்பாணம் தீவுப்பகுதி. அமிர்தலிங்கத்திற்கும் காவலூர் நவரத்தினத்துக்கும் இடையிலான பகிரங்க விவாதத்தில் தொடங்கி தீவுப் பகுதிக்கு என்று சிறப்பான முன்னுதாரணங்கள் உண்டு. நவரத்தினம் தனிநாட்டுக் கோரிக்கையின் பிதாக்களில் ஒருவர். பலமான தமிழரசுக் கட்சியின் தலைமையை அவர் எதிர்த்தார். அவரோடு பக்கபலமாய் நின்றவர்கள் அநேகர் தீவுகளைச் சேர்ந்தவர்கள்தான். அண்மையில் கட்சிக்குள் நடந்த தேர்தலில் தீவுப்பகுதி உறுப்பினர்கள் ஒரு சிறிய தொகை. எனினும் அச்சிறு தொகை அசையாது சிறீதரனோடு நின்றது. இவைதவிர கடைசி நேரத்தில் வெல்பவரின் பக்கம் சாய்பவர்கள் சிறீதரனை வெற்றிபெற வைத்தார்கள். சிறீதரன் அதற்காகத் திட்டமிட்டு உழைத்தார். வெல்லமுடியும் என்ற நம்பிக்கையை அவர் தொடக்கத்திலிருந்து இழக்கவில்லை. அதை ஒரு கொள்கை வெற்றி என்று கூறுவது மிகைப்படுத்தலாக இருக்கலாம். தமிழரசுக் கட்சிமட்டுமல்ல ஏனைய கட்சிகளுக்குள்ளும் விசுவாசக் கட்டமைப்புகள் கொள்கையின் அடிப்படையில் கட்டியெழுப்பப்படவில்லை. அவை நலன்களின் அடிப்படையில்தான் கட்டியெழுப்பப்பட்டிருக்கின்றன. தமிழ் அரசியல்வாதிகளில் எத்தனை பேர் நேர்மையானவர்கள்? எத்தனை பேர் தேசியம் என்றால் என்ன என்பதனை அதன் நடைமுறை அர்த்தத்தில் விளங்கி வைத்திருக்கிறார்கள்? கடந்த 15 ஆண்டுகளில் தேசியம் எனப்படுவது திருடர்களும் பொய்யர்களும் பாலியல் குற்றவாளிகளும் எடுத்தணியும் முகமூடியாக மாறியிருக்கிறது.

இதை இவ்வாறு கூறுவதன்மூலம் தமிழரசுக் கட்சிக்குள் இருக்கக்கூடிய நேர்மையான தேசியவாதிகளை இக்கட்டுரை கொச்சைப்படுத்தவில்லை. ஆனால் அது ஒரு பொதுப்போக்கு. கடந்த 15 ஆண்டு கால தேசிய நீக்க அரசியலின் விளைவு. எனவே கட்சியை கொள்கை ரீதியாக வார்த்தெடுக்க வேண்டிய ஒரு பொறுப்பு சிறீதரனுக்கு உண்டு. அவர் இப்பொழுது தனது சொந்த வெற்றியின் கைதி. தனக்குக் கிடைத்த வெற்றி கொள்கை வெற்றிதான் என்று அவர் நிரூபித்துக்காட்ட வேண்டும். இது முதலாவதாக சிறீதரன் செய்ய வேண்டியது. அதாவது கட்சிக்குள் கூட்டொருமைப்பாட்டை ஆக்கக்கூடியபட்சம் கட்டியெழுப்புவது.

இரண்டாவதாக, சிறீதரன் தனது சொந்த மாவட்டத்திலேயே தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்க வேண்டும். அங்கே அவர் அரசியலை துருவமயப்படுத்தி வைத்திருக்கின்றார். தமிழரசுக் கட்சியின் ஏனைய மாவட்டக் கிளைகளோடு ஒப்பிடுகையில், கிளிநொச்சியில்தான் துரோகி - தியாகி என்ற உரையாடல் அதிகமாக உண்டு. அதற்குக் காரணம் சந்திரகுமாரின் சமத்துவக் கட்சி அங்கே ஒரு பலமான வாக்குத் தளத்தைக் கொண்டிருப்பதுதான். அதற்கு ஒரு பலமான காரணம் உண்டு.

கிளிநொச்சி போரினால் அதிகம் பாதிக்கப்பட்ட ஒரு மாவட்டம். விடுதலைப்புலிகள் இயக்கத்தின் இறுதிக்கட்டத் தலைநகரமாக இருந்தது. 2009க்குப் பின் அங்குள்ள புனர்வாழ்வு பெற்ற போராளிகளில் ஒரு பகுதியினருக்குச் சந்திரகுமார் பெருமளவுக்குப் புகலிடம் கொடுத்தார். பாதுகாப்புக் கொடுத்தார். தொழில் கொடுத்தார். அவ்வாறு அவரால் அரவணைக்கப்பட்ட முன்னாள் இயக்கத்தவர்கள் பலர் முன்பு இயக்கத்தில் நிர்வாகப் பொறுப்புகளில் இருந்தவர்கள். அந்த ஊரவரல்லாத சந்திரக்குமாருக்கு அவர்கள் பலமான ஒரு வாக்குத்தளத்தைக் கட்டியெழுப்பினார்கள். சந்திரக்குமாரின் சமத்துவக் கட்சியில் மாவட்ட அமைப்பாளரும் உட்பட முக்கிய பொறுப்புக்களில் பல முன்னாள் புலிகள் இயக்கத்தவர்கள் உண்டு. தமிழ்த் தேசியப் பரப்பில் ஜனநாயகப் போராளிகள் கட்சிக்கு வெளியே அதிகம் முன்னாள் விடுதலைப் புலிகளைக் கொண்ட கட்சி சமத்துவக் கட்சிதான்.

மேலும் சந்திரக்குமார் அங்கே பிற்படுத்தப்பட்ட மக்கள் மத்தியில் அதிகமாக வேலை செய்திருக்கிறார். அவருடையது அபிவிருத்தி மைய அரசியல். இவ்வாறு சிறீதரனின் சொந்த மாவட்டத்துக்குள்ளேயே அவருக்குச் சவாலாக பலமான எதிர் வாக்குத்தளம் உண்டு. அது இனப்படுகொலையாளிகளின் வாக்குவங்கி என்று கூறி முத்திரை குத்திவிட்டுப் போக முடியாது. அல்லது தியாகி - துரோகி என்ற அளவுகோல்களால் அதை மதிப்பிடவும் முடியாது. இந்த விடயத்தில் சிறீதரன் பண்புருமாற்றம் ஒன்றுக்குத் தலைமை தாங்கத் தயாராக இருக்க வேண்டும். இது இரண்டாவது.

மூன்றாவது, கட்சிகளை ஒருங்கிணைப்பது. 2009க்கு முன் இருந்த அதே ஐக்கியத்தை மீண்டும் கட்டியெழுப்ப முடியாது. கடந்த 15 ஆண்டுகால அனுபவத்தின் அடிப்படையில் தேசத் திரட்சியை எப்படிப் பாதுகாப்பது என்று சிந்திக்க வேண்டும். எல்லாவற்றையும் கட்டமைப்புக்குள்ளால் சிந்திக்க வேண்டும். குறைந்தபட்சம் வெளி விவகாரத்திலாவது கட்சிகளுக்கு அப்பாற்பட்ட ஒரு தேசிய கட்டமைப்பை உருவாக்க வேண்டும். இந்தியாவையும் ஐநாவையும் மேற்கு நாடுகளையும் அக்கட்டமைப்புத்தான் கையாள வேண்டும். தனிநபர்கள் தனியோட்டம் ஓடுவதற்கு அனுமதிக்கக்கூடாது. அது சிறீதரனுக்கும் பொருந்தும்.

எனவே சிறீதரன் முதலில் கட்சிக்குள் துருவ நிலைப்பட்டிருக்கும் உறுப்பினர்களை ஒரு திரளாக வார்த்தெடுக்க வேண்டும். ஒரு கூட்டுணர்வை உருவாக்க வேண்டும். இரண்டாவதாக, தனது மாவட்டத்தில் அதைச் செய்ய வேண்டும். மூன்றாவதாக, தேசிய மட்டத்தில் அதைச் செய்யவேண்டும். அதாவது ஒரு பண்புரு மாற்றத்திற்குத் தலைமை தாங்க வேண்டும். அதற்கவர் தயாரா?

**நிலாந்தன்**

# இறுதி யுத்தத்தில் சரணடைந்த விடுதலைப்புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் என்னவானார்கள்?




இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு மோதல் முடிவுக்கு வந்தபோது, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த எவரும் இராணுவத்திடம் சரணடையவில்லை என்று தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவிடம் இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளது. ஊடகவியலாளர் பாலகிருஷ்ணன் நிரோஸ் குமார் என்பவரின் தகவலறியும் உரிமை விண்ணப்பம் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்காக மேற்படி ஆணைக்குழு கூடியபோது, அதன் முன்பாக காணொளி காட்சி மூலம் தோன்றி சாட்சியமளித்த இலங்கை இராணுவ பிரிகேடியர் என். கே.நாகாவத்த இந்த தகவலை பதிவு செய்துள்ளார்.

இறுதி யுத்தத்தின் போது இராணுவத்தினரிடம் சரணடைந்த விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் தொடர்பில் தகவல்களைக் கோரி, ஊடகவியலாளர் நிரோஸ் குமார் தகவலறியும் உரிமை சட்டத்தின் கீழ், இலங்கை இராணுவத்துக்கு விண்ணப்பம் செய்திருந்தார். தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழு அதற்கு திருப்திகரமான பதில் வரவில்லை என்று கூறி அவர் இது விடயமாக தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்திருந்தார். இதற்கிணங்க கடந்த 3ஆம் திகதி விசாரணைக்காக ஆணைக்குழு கூடியபோது காணொளி வழியாக முன்னிலையான பிரிகேடியர் நாகாவத்த, "யுத்தத்தின் இறுதி கட்டத்தில் இலங்கை இராணுவத்திடம் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் எவரும் சரணடையவில்லை" என தெரிவித்தார். இதன்போது ஊடவியலாளர் நிரோஸ் சார்பாக சட்டத்தரணி ஸ்வஸ்திகா அருலிங்கம் மற்றும் ஊடகவியலாளர் தரிந்து ஜயவர்த்தன ஆகியோர் ஆணைக்குழுவில் முன்னிலையாகி வாதங்களை முன்வைத்தனர்.

ஊடகவியலாளர் நிரோஸ் குமார், இலங்கை இராணுவத்திடம் சில விபரங்களைக் கோரி, தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4ஆம் திகதி, இலங்கை இராணுவத்தின் தகவல் அறியும் அதிகாரிக்கு விண்ணப்பமொன்றை அனுப்பி வைத்தார். 'இறுதி யுத்த காலப்பகுதியில் இலங்கை இராணுவத்தினரிடம் சரணடைந்த தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர் தொடர்பான தகவல்கள் எனத் தலைப்பிடப்பட்டிருந்த அந்த விண்ணப்பத்தில் 6 கேள்விகளுக்கான தகவல்களை நிரோஸ் கோரியிருந்தார்.

**பல்வேறு கேள்விகள்**

**விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த எத்தனை பேர் இராணவத்தினரிடம் சரணடைந்தனர்? (ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் எத்தனை பேர்)**

**விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் எந்தெந்தப் பகுதியில் வைத்து இராணுவத்தினரிடம் சரணடைந்தனர், அது தொடர்பான தகவல்கள் வழங்கப்படல் வேண்டும்.**

**விடுதலைப் புலி உறுப்பினர்கள் சரணடையும் போது, அவர்களைப் பொறுப்பேற்ற இராணுவ அதிகாரிகள், இராணுவப் படைப்பிரிவு போன்றவற்றின் தகவல்கள் வழங்கப்பட வேண்டும்.**

**சரணடைந்த விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன? அவர்களுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தால் அது தொடர்பான தகவல்கள் வழங்கப்பட வேண்டும்.**

**விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த தளபதிகள் அல்லது உயர் பதவிகளில் இருந்தோர் எத்தனை பேர் இராணுவத்திடம் சரணடைந்தனர், அவர்கள் சரணடைந்த இராணுவத் தளபதி, இராணுவப் படைப் பிரிவு போன்ற தகவல்கள் வழங்கப்பட வேண்டும்.**

**புலிகள் அமைப்பின் சரணடைந்த முக்கிய உறுப்பினர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன? சரணடைந்தவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தால் அல்லது அவர்கள் சிறைத் தண்டனை அனுபவித்துக் கொண்டிருந்தால் அவை தொடர்பான தகவல்கள் வழங்கப்பட வேண்டும்** என்று நிரோஸ் குமார் தனது விண்ணப்பத்தில் கேட்டிருந்தார்.

**எவரும் இலங்கை இராணுவத்திடம் சரணடையவில்லை**

2019 ஜுன் 25ஆம் திகதி இதற்கு எழுத்து மூலம் பதிலளித்த இலங்கை இராணுவத்தின் தகவல் அதிகாரி, விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் எவரும் இலங்கை இராணுவத்திடம் சரணடையவில்லை என்றும், அவர்கள் இலங்கை அரசிடமே சரணடைந்தார்கள் எனவும் தெரிவித்திருந்தார். அது தொடர்பான விபரங்களை புனர்வாழ்வு ஆணையாளர் நாயகப் பணியகத்திடம் பெற்றுக்கொள்ள முடியுமெனவும், அந்தப் பதிலில் குறிப்பிடப்பட்டிருந்தது. அதில் திருப்தியடையாத ஊடகவியலாளர் நிரோஸ் குமார், தனது விண்ணப்பம் தொடர்பில் இலங்கை இராணுவத்துக்கு மேன்முறையீடு செய்தார். அப்போதும், முன்னைய பதில்தான் ராணுவத்திடமிருந்து கிடைத்தது. இந்த நடவடிக்கைகளின் போது, தனது விண்ணப்பத்தினை தமிழில் சமர்ப்பித்திருந்ததாகவும் ஆனால், தனக்கு வழங்கப்பட்ட எழுத்து மூல பதில்கள் அனைத்தும், சிங்கள மொழியிலேயே கிடைத்ததாகவும் நிரோஸ் குமார் கூறுகின்றார். இராணுவப் பகுதிக்கு வந்தோரில் புலிகள் இருந்தார்களா எனத் தெரியாது. இராணுவம் வழங்கிய பதில்களில் திருப்தியடையாத நிரோஸ் குமார், 2019ஆம் ஆண்டு 10ஆம் மாதம் தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவுக்கு நேரடியாகச் சென்று, தனது விண்ணப்பம் தொடர்பில் முறையீடு செய்ததாக ஊடகம் ஒன்றிடம் தெரிவித்துள்ளார்.

இதன் பின்னர், நீண்ட இழுத்தடிப்புகளுக்குப் பின்னர் 3 வருடங்கள் கடந்த நிலையில் இம்மாதம் 3ஆம் திகதி, நிரோஸ் வழங்கிய முறைப்பாட்டை, தகவல் அறியும் உரிமை தொடர்பான ஆணைக்குழு விசாரணைக்கு எடுத்துக்கொண்டது. அப்போது காணொளி மூலம் தோன்றி சாட்சியமளித்த இராணுவ பிரிகேடியர் என். கே.நாகாவத்த யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் விடுதலைப் புலிகள் எவரும் இராணுவத்திடம் சரணடையவில்லை. அப்போது மக்கள் இடம்பெயர்ந்து இராணுவப் பகுதிக்கு வந்தார்கள். அவர்களில் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் இருந்தார்களா என எமக்குத் தெரியாது. எம்மிடம் வந்தவர்கள் தொடர்பில் நாங்கள் எந்தப் பதிவுகளையும் செய்யவில்லை. அவர்களை பேருந்துகளில் ஏற்றி உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் தங்கவைக்கப்படும் முகாம்களுக்கு அனுப்பி வைத்தோம். அந்த முகாம்கள் புனர்வாழ்வு ஆணையாளர் நாயக பணியகத்தின் கட்டுப்பாட்டில் இருந்தன. அங்கு சென்றவர்கள் தொடர்பான நடவடிக்கைகளை அந்தப் பணியகம்தான் மேற்கொண்டது. அவ்வாறான தகவல்களை புனர்வாழ்வு ஆணையாளர் நாயகப் பணியகத்திடம்தான் பெற்றுக்கொள்ள முடியும் என்று கூறியதாக ஊடகவியலாளர் நிரோஸ் குமார் தெரிவித்தார்.

நான்கு பேரைக் கொண்ட தகவலறியும் உரிமை தொடர்பான ஆணைக்குழுவின் முன்னிலையில், இந்த விடயங்களை இலங்கை இராணுவத்தின் குறித்தளிக்கப்பட்ட அதிகாரி கூறியிருந்தார். இதன்போது இராணுவத்தின் கூற்றை மறுத்த ஊடகவியலாளர் நிரோஸ் குமார் தரப்பு சட்டத்தரணி ஸ்வஸ்திகா, இராணுவத்தினரிடம் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் சரணடைந்தமை தொடர்பான சில ஆவணங்களை ஆணைக்குழுவிடம் ஒப்படைத்தார். இராணுவத்திடம் புலிகள் சரணடைந்ததாக அப்போது அரசாங்கத்தில் அங்கம் வகித்த அமைச்சர்கள், அப்போதைய இராணுவப் பேச்சாளர் உள்ளிட்டோர் ஊடகங்கள் முன்னிலையில் தெரிவித்த செய்திகள் இந்த ஆவணங்களில் உள்ளடங்கியிருந்தன. இரு தரப்பினரின் வாதங்களையும் கவனத்திற் கொண்ட ஆணைக்குழு, ஊடகவியலாளர் நிரோஸ் மற்றும் இராணுவம் ஆகிய தரப்பினர் தத்தமது நிலைப்பாடுகள் தொடர்பான எழுத்து மூல சமர்ப்பணங்களை 10 நாட்களுக்குள் வழங்குமாறு உத்தரவிட்டது. மேலும் இது தொடர்பான அடுத்த கட்ட விசாரணையை எதிர்வரும் ஜனவரி மாதம் 4ஆம் திகதி விசாரிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இறுதி யுத்தத்தில் தம்மிடம் விடுதலைப் புலிகள் எவரும் சரணடையவில்லை என்று இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளமை தொடர்பில், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் தளபதி எழிலனின் மனைவியும், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான அனந்தி சசிதரன் கருத்து தெரிவிக்கையில், 2009 இறுதி யுத்தத்தில் சரணடைந்த, 2009ஆம் ஆண்டு இறுதி யுத்தம் முடிவுக்கு வந்தபோது, இராணுவத்திடம் எழிலன் சரணடைந்ததாகவும் அதனை தான் நேரில் கண்டதாகவும் அனந்தி சசிதரன் நீண்ட காலமாக கூறி வருகின்றார். இவ்விடயம் தொடர்பாகபேசிய அனந்தி, "இராணுவத்திடம் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் எவரும் சரணடையவில்லை எனக் கூறப்படுவது பொய்" என்கிறார். 2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி அருட்தந்தை பிரான்சிஸ் ஜோசஃப் உடன் சென்ற எழிலன், இராணுவத்திடம் சரணடைந்ததை தான் நேரில் கண்டதாகக் கூறியுள்ளார். "முள்ளிவாய்க்காலில் இருந்து இராணுவம் அழைத்த இடத்துக்கு மக்களுடன் சேர்ந்து நானும் எனது மூன்று பிள்ளைகளும் வரிசையில் சென்றோம். அப்போது அரச உத்தியோகத்தருக்கான எனது அடையாள அட்டையை இராணுவத்தினரிடம் காட்டினேன். இராணுவ அதிகாரியொருவர் வந்து எனது அடையாள அட்டையைப் பார்த்துவிட்டு, நீ இந்த வரிசையில் வரவேண்டாம், உனக்கான வரிசை அங்கேயுள்ளது என கொச்சைத் தமிழில் கூறி, நான் நின்ற வரிசையிலிருந்து என்னையும் பிள்ளைகளையும் நீக்கி விட்டார்". "அப்போது பிரான்சிஸ் ஜோசஃப் உடன் சென்று இராணுவத்தினரிடம் சரணடைந்த நிலையில் சற்று தூரத்தில் நின்றிருந்த எழிலன், என்னைப் பார்த்து, 'நீ போ' என்பது போல் தலையசைத்தார். முட்கம்பிகளுக்கு இந்தப் பக்கம் நாங்களும் அந்தப் பக்கம் அவர்களுமாக இருந்தோம். அப்போது அங்கு நின்ற பேருந்துகளை நோக்கி எழிலன் உள்ளிட்டவர்களை ராணுவத்தினர் அழைத்துக்கொண்டு செல்வதை நான் பார்த்தேன்" என, அனந்தி கூறியுள்ளார்.

எழிலனை அழைத்துச் சென்றவர்கள் இராணுவ சிப்பாய்கள் இல்லை என்றும், இராணுவ உயர் அதிகாரிகளே அழைத்துச் சென்றனர் எனவும் அனந்தி தெரிவித்துள்ளார். "எழிலனுக்கு அருகாமையில் நாங்கள் நின்றிருந்த ஒரு சமயத்தில் 'மாவிலாறு' 'எழிலன்' எனும் வார்த்தைகளைக் கூறிக் கொண்டே எழிலனை இராணுவத்தினர் அழைத்துச் சென்றனர்" எனவும் அனந்தி குறிப்பிட்டுள்ளார். "அந்த இடத்திலிருந்து பொதுமக்களை பேருந்துகளில் ஏற்றிக் கொண்டு சென்றனர். அதில் நானும் பிள்ளைகளும் சென்றோம். ஓமந்தையில் ஓரிடத்தில் பேருந்து தரித்து நின்றது. அப்போது மற்றைய பேருந்தில் வந்த ஒருவர் என்னிடம் ஓடிவந்து, 'அனந்தி அக்கா, நல்லவேளை நீங்கள் வந்துவிட்டீர்கள். அங்கு ஆர்மி உங்களைத் தேடுகிறார்கள்' என்றார். விடுதலைப் புலிகள் இயக்க முக்கியஸ்தர்களோடு அவர்களின் குடும்பத்தினரையும் இராணுவத்தினர் அழைத்துச் சென்றிருந்தனர் என்பது, அப்போதுதான் எனக்கு தெரிய வந்தது" எனவும் அனந்தி கூறினார்.

தனது கணவர் எழிலன் இராணுவத்தினரிடம் சரணடைந்தமையை தான் நேரில் கண்டதை, நீதிமன்றத்தில் வழங்கிய சாட்சியங்களின் போதும், தான் தெரிவித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார. இராணுவத்தினரிடம் சரணடைவதற்காக எழிலன் உள்ளிட்ட விடுதலைப் புலி உறுப்பினர்களை அழைத்துச்சென்ற அருட்தந்தை பிரான்சிஸ் ஜோசஃப் கூட அதற்குப் பிறகு திரும்பவில்லை என்றும் அனந்தி சசிதரன் மேலும் தெரிவித்துள்ளார்.

08ஆம் பக்கம் பார்க்க...

நெற்றிப்பொறியன்

# பிராந்திய செய்திகள்

## மீண்டும் மின்சார நெருக்கடி ஏற்படலாம்

உத்தேசிக்கப்பட்டுள்ள புதுப்பிக்கத்தக்க மின் நிலையத் திட்டங்களை நடைமுறைப்படுத்தாவிட்டால், இந்த வருடத்தில் நாட்டில் மீண்டும் மின்சார நெருக்கடி ஏற்படக்கூடும் என இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் கலாநிதி நரேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

நிதி திவால்நிலைக்கான காரணங்களை ஆராய்ந்து பாராளுமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக மின்சார சபையின் அதிகாரிகள் பாராளுமன்ற விசேட குழுவிற்கு அழைக்கப்பட்டிருந்த நிலையில், இதன்போது கடந்த காலங்களில் நாட்டில் ஏற்பட்டுள்ள மின்சார நெருக்கடி தொடர்பில் விடயங்கள் கேட்கப்பட்டன.

இதன்போது, கருத்து தெரிவித்த மின்சார சபையின் பொது முகாமையாளர் கலாநிதி நரேந்திர சில்வா, கடந்த அரசாங்கங்கள் எடுத்த சில தீர்மானங்கள் மற்றும் மின் உற்பத்தித் திட்டங்களுக்கு அமைவாக மின் உற்பத்தி நிலையங்கள் இயங்காததன் விளைவுகளை மக்கள் தற்போது அனுபவிக்க நேரிட்டுள்ளதாக குறிப்பிட்டார். செயற்திறன் ஆற்றல் வகைகளை பயன்படுத்தி எதிர்கால உற்பத்தித் திட்டங்களைத் தயாரிக்கவேண்டும் என மின்சார சபையின் பொது முகாமையாளர் கலாநிதி நரேந்திர சில்வா தெரிவித்தார்.

## ஊனமுற்றோர், முதியோருக்கான கொடுப்பனவுகள் அதிகரிப்பு

ஊனமுற்றோர், முதியோர் மற்றும் சிறுநீரக பாதிப்புக்கான கொடுப்பனவு ஜனவரி மாதம் முதல் அதிகரிக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இதன்படி, 5,000 ரூபாவாக இருந்த ஊனமுற்றோர் மற்றும் சிறுநீரக உதவித்தொகை 7,500 ரூபாவாகவும், 2,000 ரூபாவாக இருந்த முதியோர் உதவித்தொகை 3,000 ரூபாவாகவும் அதிகரிக்கப்படவுள்ளது.

இதேவேளை, தற்போது நிவாரணப் பயனாளி குடும்பங்களில் உள்ள ஊனமுற்றோர், முதியோர் மற்றும் சிறுநீரக பாதிப்புக்கான கொடுப்பனவுகளைப் பெறத் தகுதியுடையவர்கள் இந்த ஆண்டின் முதல் காலாண்டில் அடையாளம் காணப்பட்டு, அதன் பின்னர் ஏப்ரல் 1 ஆம் திகதி முதல் அவர்களுக்கும் இந்த அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவு வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

## "கொத்துவேலி" கவிதை நூல் வெளியீடு



பெரியநீலாவணை பைந்தமிழ்ச் சுடர் சிவபாதசுந்தரம் சுதாகரன் எழுதிய "கொத்துவேலி" கவிதை நூல் வெளியீட்டு விழா (07) திருமலை நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது. கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், எழுத்தாளரும் மாகாணப் பண்பாட்டலுவல்கள் பணிப்பாளருமாகிய ச.நவநீதன் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவுக்கு விருந்தினர்களாக திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர், கிழக்கு மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள், திணைக்களங்களின் மாகாணப் பணிப்பாளர்கள், கிழக்கு பல்கலைக்கழக திருமலை வளாக முதல்வர் உள்ளிட்ட பல உயர் அதிகாரிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

எண்ணம்போல் வாழ்க்கை இலக்கிய மன்றத்தின் ஒருங்கமைப்பில் இடம்பெற்ற இந்நூல் வெளியீட்டு விழாவின் வரவேற்புரையை எண்ணம்போல் வாழ்க்கை இலக்கிய மன்றத் தலைவர் எழுத்தாளர் கனக.தீபகாந்தனும், "கொத்துவேலி" நூலாசிரியர் பற்றிய அறிமுகவுரை, நூல் பற்றிய சிறப்பு நயவுரையை சமூகசேவைத் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் எழுத்தாளர் இரா. கி.இளங்குமுதன் மற்றும் ஓய்வுநிலை அதிபர் கவிஞர் இரா.இரத்தினசிங்கம் ஆகியோர் நிகழ்த்தினர். சிவபாதசுந்தரம் சுதாகரனின் "நீலையூர் சுதா" எனும் புனைபெயருடன் கிராமிய மணங்கமழும் வகையில் நாட்டுப்புற வாழ்க்கை, நிகழ்கால நாட்டு நடப்புக்கள் என அனைவரும் ரசித்து வியக்கும் வகையிலான உயிரோட்டமுள்ள கவிதைப் படைப்புக்கள் கொண்ட இந்நூல் "கொத்துவேலி" எனும் பெயரில் தொகுக்கப்பட்டுள்ளது.

திருமதி லலிதா சுதாகரனால் "கிடுகு வீடு" எனும் தலைப்பிலும் கவிதைத் தொகுப்பொன்றை வெளியிட்டு பெருவரவேற்பை பெற்ற "நீலையூர் சுதா", பல ஆலய இறுவட்டுகளுக்காக பாடல்களையும் எழுதியுள்ளார். அம்பாறை மாவட்டத்தின் வடக்கு எல்லையின் விவசாயக் கிராமமான பெரியநீலாவணையை பிறப்பிடமாக கொண்ட "கொத்துவேலி" நூலாசிரியரான பைந்தமிழ் சுடர் சுதாகரன் கிழக்கு மாகாண மீன்பிடி திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளராகவும் கடமையாற்றி வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.
(அபு அலா)

## கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பொங்கல் விழா

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தில் "எழுச்சிப் பொங்கல் விழா - 2024" (08) அன்று பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்றது. மாணவர்களின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக சமூகம் ஒன்றிணைந்து நடத்திய இந்நிகழ்வின் பிரதம அதிதியாக உபவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம் கலந்து கொண்டார்.

108 பானைகளில் பொங்கல், பாரம்பரிய விளையாட்டு மற்றும் கலை நிகழ்வுகளை முன்னெடுக்கும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட இப்பொங்கல் விழாவில் பிரதி உபவேந்தர் கலாநிதி பிரபாகரன், கிழக்குப் பல்கலைக்கழக விஞ்ஞான பீட பீடாதிபதி சிரேஷ்ட பேராசிரியர் வினோவபா, விவசாய பீட பீடாதிபதி பேராசிரியர் திருமதி புனிதா பிரேமானந்த ராஜா, வர்த்தக முகாமைத்துவ பீட பீடாதிபதி பேராசிரியர் ராஜேஸ்வரன், கலை கலாசார பீட பீடாதிபதி கலாநிதி குணபாலசிங்கம் ஆகியோர் சிறப்பு அதிதிகளாக கலந்து கொண்டார்கள். பல்கலைக்கழக பதிவாளர் பகிரதன், நிதியாளர் பாரிஸ் மற்றும் கல்விசார், நிர்வாக, கல்விசாரா அத்துடன் மாணவர்களின் பங்குபற்றலுடன் வெகு விமர்சையாக இது நடைபெற்றது.

இதன்போது பல்கலைக்கழக மாணவர்களின் நடனம், களி இசை, குழு நடனம், குழுப் பாடல், சிங்களப் பாடல், கண்டிய நடனம் உட்பட பல்வேறு நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.
(நூருல் ஹுதா உமர்)

07ஆம் பக்கத் தொடர்ச்சி...

நாடாளுமன்ற உறுப்பினரும், மூத்த சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் நாடாளுமன்றில் உரையாற்றியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. "தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பமொன்றுக்கு அண்மையில் இராணுவம் பதிலளிக்கும் போது, தம்மிடம் யாரும் சரணடையவில்லை என்று கூறியிருந்தது. ஆனால், தாய்மாரும் மனைவியர்களும் இராணுவத்திடம் தங்கள் உறவுகளை தாங்களே கையளித்ததாக புகார் கூறுகின்றனர். இப்படியிருக்கும் போது, தங்கள் கண்கள் முன்பாகவே இராணுவத்திடம் பலர் சரணடைந்தமையை மக்கள் பார்த்துள்ள நிலையில், இராணுவத்திடமிருந்து இப்படியொரு அறிக்கை வெளிவருவதால், மக்கள் உடனடியாகவே நம்பிக்கை இழந்து விடுகின்றனர்" என சுமந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

2009 இறுதி யுத்தத்தில் சரணடைந்த பாலகுமாரனை தாம் கைது செய்யவில்லையென படைத்தரப்பும், இராணுவமும் திரும்பத்திரும்ப கூறிவரும் நிலையில் புகைப்படம் ஒன்று வெளியாகியிருந்தது. தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர் க.வே. பாலகுமாரனும், அவரது மகனும் இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுவது போன்று அப்புகைப்படம் காணப்பட்டுள்ளது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.


### அருட்தந்தை பிரான்சிஸ் யோசப் தலைமையில் சரணடைந்தவர்கள்

அத்துடன், முல்லைத்தீவு நீதிமன்றில் இராணுவம் தெரிவித்தது போன்று அருட்தந்தை பிரான்சிஸ் யோசப் தலைமையில் சரணடைந்தவர்களின் பெயர் விபரம் வெளியிடப்பட வேண்டும். அதனுடாக ஆணைக்குழு தனது கணவனை கண்டுபிடித்து தரவேண்டும் என போராளி பரராஜசிங்கம் உமாபதியின் மனைவி ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார். அவர் தனது சாட்சியத்தில், 11 ஆயிரம் போராளிகளை புனர்வாழ்வளித்து விடுதலை செய்த இந்த அரசால் வெளிப்படையாக பேருந்தில் ஏற்றிச் செல்லப்பட்ட 50 பேரின் விபரங்களை வெளியிட முடியாமைக்கான காரணம் என்ன? என ஆணைக்குழுவிடம் கேள்வியெழுப்பினார். அருட்தந்தை பிரான்சிஸ் யோசப் தலைமையில் தனது கணவர் பரராஜசிங்கம் உமாபதி உட்பட 50 போராளிகள் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 17-ம் திகதி இராணுவத்திடம் சரணடைந்த நிலையில் அவர் எம்முடன் இன்று வரை எந்தவித தொடர்புகளும் அற்று இருக்கின்றார் என தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் அவர் குறிப்பிட்டதாவது, "எனது கணவர் உட்பட 50 போராளிகளையும் அருட்தந்தை பிரான்சிஸ் யோசப்பையும் ஏற்றிச் சென்ற இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான சிவப்பு நிற பேருந்தில் சென்றவர்களின் விபரம் எமக்கு கிடைக்கப் பெறவில்லை. எனவே இது தொடர்பாக எங்களுக்கு நீதி வேண்டும். போராளிகளை புனர்வாழ்வளித்து விடுதலை செய்த இந்த அரசால் வெளிப்படையாக பேருந்தில் ஏற்றிச் செல்லப்பட்ட இந்த 50 பேர் தொடர்பாக விபரங்களை வெளியிட முடியாமைக்கான காரணம் என்ன? எனது கணவனை தேடி வருடங்களாக நான் அலைந்து திரிகின்றேன்.

இறுதி யுத்தத்தின் போது அரசாங்கம் விடுதலைப் புலிகளை சரணடைய கூறியது. அதனடிப்படையில் எனது கணவர் 33 வயதில் இராணுவத்தினரிடம் சரணடைந்தார். அவர் இருக்கின்றாரா? இல்லையா? என ஆணைக்குழு தெரிவிக்க வேண்டும். அருட்தந்தை பிரான்சிஸ் யோசப்புடன் சரணடைந்த போராளிகளில் ஆறு பேருக்கான ஆட்கொணர்வு மனு தொடர்பான வழக்கு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் நடந்து வருகிறது. அதன்படி கடைசியாக நடைபெற்ற வழக்கின் போது வட்டுவாகல் பகுதியில் சரணடைந்தவர்களின் பெயர் பட்டியல் உள்ளது என சாட்சியமளித்து அதனை இராணுவம் ஒப்புக்கொண்டது. அந்த பட்டியலின் அடிப்படையில் இம்மாதம் நடைபெறவுள்ள வழக்கில் குறித்த பட்டியலில் எனது கணவரின் பெயர் வரும் என்ற நம்பிக்கையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றேன்.

இராணுவம கூறுகிறது, சசிதரன் என்றழைக்கப்படும் எழிலன் பெயர் தங்களிடம் இல்லை. ஆனால் வட்டுவாகலில் இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்களின் பெயர் விபரம் எங்களிடம் இருக்கின்றது என்று ஆறு பேர் தொடர்பான ஆட்கொணர்வு மனுவில் முதலாவது நபர் எழிலன். ஆனால் ஆட்கொணர்வு மனுவின்படி எழிலன் தொடர்பாக விசாரணையில் எழிலன் இல்லை என இராணுவம் கூறுகிறது. ஆனால் ஏனைய சரணடைந்தவர்களின் பட்டியல் இருப்பதாக கூறுகிறது. முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் இந்த பட்டியலை இராணுவம் சமர்ப்பிக்கவேண்டும். அந்த பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டால் எனது கணவரின் பெயரும் அதில் உள்ளடக்கப்பட்டிருக்கும். ஏன் என்றால் எனது கணவரும் அந்த இராணுவ முகாமில் தான் சரணடைந்தார். எனவே ஆணைக்குழு எனது கணவரை கண்டுபிடித்து தரவேண்டும்" என ஆணைக்குழு முன் கண்ணீர் மல்க சாட்சியமளித்தார் என்பதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.



# சினி துளிகள்







## விஜய்க்கு அடுத்து அரசியலுக்கு வருகிறாரா விஷால்

சினிமாவில் இருந்து அரசியல் வந்த பிரபலங்கள் பலர் உள்ளார்கள். தமிழ் சினிமா இல்லை எந்த மொழி சினிமா எடுத்தாலும் அதில் உள்ள பிரபலங்கள் அரசியல் வந்துள்ளார்கள். அப்படி தமிழ் சினிமாவில் எம்.ஜி.ஆர், சிவாஜி கணேசன், விஜயகாந்த், கமல்ஹாசன் என பலர் வந்தார்கள்.

அவர்களை அடுத்து இப்போது விஜயும் அரசியலில் என்ட்ரி கொடுத்துள்ளார். தற்போதைக்கு தனது கட்சி பெயர் அறிவிப்பை மட்டும் வெளியிட்டுள்ளார், அடுத்த அறிவிப்பு எப்போது வரும் என தெரியவில்லை.

விஜயை தொடர்ந்து நடிகர் விஷால் அரசியலுக்கு வருவதாக சமூக வலைதளங்களில் பேச்சுகள் வந்தன. இந்த நிலையில் நடிகர் விஷால் திடீரென ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அதில் அவர், சமூகத்தில் எனக்கு இத்தனை ஆண்டுகளாக ஒரு நடிகனாக, சமூக சேவகனாக உங்களில் ஒருவனாக அந்தஸ்தும் அங்கீகாரமும் அளித்த தமிழக மக்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளேன்.

என்னால் முடிந்த உதவிகளை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் ஆரம்ப காலத்தில் இருந்தே என்னுடைய ரசிகர் மன்றத்தை ஒரு சராசரி மன்றமாய் கருதாமல் மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று எண்ணினேன், "இயன்றதை செய்வோம் இல்லாதவர்களுக்கு" என்ற நோக்கத்தில் நற்பணி இயக்கமாக செயல்படுத்தினோம்.

நான் எப்போதும் அரசியல் ஆதாயத்தை எதிர்பார்த்து மக்கள் பணி செய்தது இல்லை. "நன்றி மறப்பது நன்றன்று" என்ற வள்ளுவனின் வாக்குப்படி என்னால் முடிந்த உதவிகளை நான் செய்துகொண்டே தான் இருப்பேன். அது என்னோட கடமை என்று மன ரீதியாக நான் கருதுகிறேன் எனத் தெரிவித்துள்ளார்.



## புதிய தொழிலில் இறங்கியுள்ள நடிகை சன்னி லியோன்

இந்தியா முழுவதும் நடிகை சன்னி லியோன் பிரபலம். பொலிவுட் சினிமாவில் முதலில் நடிகையாக வலம் வந்தவர் பின் தமிழ் சினிமா பக்கம் வந்தார். கடந்த 2014ம் ஆண்டு வடகறி என்ற படத்தில் சிறப்பு தோற்றத்தில் நடித்து ரசிகர்களை குஷிப்படுத்தினார். தொடர்ந்து 2019ல் மதுரராஜா, 2022ல் காமெடி நடிகர் சதிஷ் நடிப்பில் ஓ மை கோஸ்ட், 2023ல் தீ இவன் ஆகிய படங்களில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்து வந்தார்.

மேலும் கொட்டேஷன் கேங் மற்றும் வீரமாதேவி ஆகிய படங்களில் நடித்து வருகிறார், இப்படங்கள் இரண்டும் இந்தாண்டு இறுதிக்குள் ரிலீஸ் ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில் நடிகை சன்னி லியோன் புதிய தொழில் ஒன்றை தொடங்கியுள்ளார். அவர் ஒரு உணவகம் திறந்துள்ளார், அதற்கு Chica Loca என்று பெயர் வைத்துள்ளார்.

மேலும் இந்த உணவகத்திற்கு ஒரு சிறப்பம்சம் என்னவென்றால் ரூ.1000 செலுத்தினால் என்னவேண்டுமானாலும் சாப்பிடலாம், விதவிதமான உணவுகளை சுவைக்கலாம் என கூறுகின்றனர்.

## 24 படத்தில் ஏற்பட்ட மிகப்பெரிய மாற்றம்



சூர்யா மற்றும் சமந்தா இருவரும் இணைந்து முதல் முறையாக அஞ்சான் திரைப்படத்தில் நடித்திருந்தனர். இப்படம் எதிர்பார்த்த வெற்றியை பெறவில்லை. இதை தொடர்ந்து மீண்டும் இவர்கள் இருவரும் இணைந்து நடித்த திரைப்படம் தான் 24.

விக்ரம் குமார் இயக்கிய இப்படத்தை சூர்யாவின் 2D Entertainment நிறுவனம் தயாரித்திருந்தது. Sci-Fi கதைக்களத்தில் உருவாகி வெளிவந்த இப்படம் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது.

இந்நிலையில், முதன் முதலில் இப்படத்தில் நடிக்கவிருந்தது நடிகர் சூர்யா கிடையாதாம். இப்படத்தின் கதையை முதலில் நடிகர் விக்ரமிற்கு தான் இயக்குனர் கூறியுள்ளார்.

ஆனால், அவரால் நடிக்க முடியாமல் போய்விட்டதன் காரணமாக, அதன்பின் சூர்யாவிடம் கதை கூறி ஓகே செய்துள்ளார்.

மேலும் சமந்தா நடித்த கதாநாயகியாக கதாபாத்திரத்தில் முதன் முதலில் இலியானா தான் கமிட் ஆகி இருந்தாராம். ஆனால், திடீரென அவர் வெளியேறிய நிலையில், அவருக்கு பதிலாக சமந்தாவை கமிட் செய்துள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது.

## தனுஷ் கதை வைத்திருந்தார் – ரஜினி நடிக்க மறுத்தது ஏன்?



நடிகர் ரஜினியின் மகள் ஐஸ்வர்யாவை தான் நடிகர் தனுஷ் காதல் திருமணம் செய்துகொண்டார். ஆனால் திருமணம் ஆகி 15 ஆண்டுகள் பிறகு அவர்கள் கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்துவிட்டனர்.

பிரிந்த பிறகு இருவரும் சினிமாவில் கவனம் செலுத்தி வருகின்றனர். ஐஸ்வர்யா இயக்கி இருக்கும் லால் சலாம் படம் ரிலீஸ் ஆகிறது.

லால் சலாம் இசை வெளியீட்டு விழாவில் பேசிய ரஜினி, தான் எப்போதும் பெரிய இயக்குனர்கள் உடன் பணியாற்றி பழகிவிட்டதால் மகள் இயக்கத்திலேயே நடிக்க முதலில் தயங்கினேன் என கூறி இருக்கிறார்.

கோச்சடையான் படத்தில் நடிக்கும்போதே சௌந்தர்யாவுக்கு பதில் கே.எஸ்.ரவிக்குமார் வந்து தான் ஆக்ஷன், கட் சொல்ல வேண்டும் என கூறினேன். "தனுஷ் எனக்காக இரண்டு கதைகள் வைத்திருந்தார், ஆனால் நான் சொன்ன காரணத்தை அவர் புரிந்துகொண்டார்" என ரஜினி தெரிவித்து இருக்கிறார். மேலும் லால் சலாம் படத்தில் தானே கேட்டு நடித்ததாகவும் ரஜினி கூறி இருக்கிறார்.

# மாவிலாறு மகிந்தவும் முள்ளிவாய்க்கால் பிரபாகரனும் நடந்தது என்ன?



## சுழியோடி

## 33

அதேவேளை, இராணுவ முன்னேற்றங்களுக்கு கருத்துக் கூறாத சர்வதேச நாடுகளும், விடுதலைப் புலிகள் ஒப்பந்தத்தை மதித்து தமது பழைய நிலைகளுக்கு திரும்பவேண்டும் என வலியுறுத்தத் தொடங்கியிருந்தார்கள்.

இந்நிலையில், போராளிகள் மீண்டும் தங்களது பழைய நிலைகளுக்கு திரும்பினார்கள். மீண்டும் அந்தப் பிரதேசங்களை ஆக்கிரமித்தது சிறீலங்கா இராணுவம். இந்த ஆக்கிரமிப்பின்போது அங்கு தங்கியிருந்த மக்கள் பலரைப் படுகொலை செய்தது.

இதில் குறிப்பாக பிரான்சின் பட்டினிக்கு எதிரான (Action Contre La Faim (ACF) அமைப்பின் பணியாளர்கள் 17 பேர் மிகக்கொடூரமாகப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட கொடுமை அரங்கேறியது.

இதற்கிடையில், மாவிலாற்றை திறப்பதற்கு பொது மக்கள் மீதான பொருளாதாரத் தடைகளை நீக்குமாறு போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஊடாக தமிழ்த் தலைவர்கள் சிலர் சமரச முயற்சியில் ஈடுபடுகின்றார்கள்.

இதில் திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவை தலைவராக இருந்து, பின்பு சிறீலங்கா துணை இராணுவஒட்டுக்குழுவினரால் சுட்டுக்கொல்லப்பட்ட விக்னேஸ்வரன் (மாமனிதர் விக்னேஸ்வரன்) மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் உள்ளிட்டோர் சிங்கள அதிகாரிகளுடனும், சிங்களத் தலைவர்களுடனும் கதைத்து இணக்கப்பாட்டினை ஏற்படுத்த முனைகின்றார்கள். அதிலும் எதுவித முன்னேற்றங்களும் ஏற்படவில்லை.

இதேவேளை, மாவிலாற்று அணை விவகாரம் தொடர்பாக விடுதலைப் புலிகளுக்கும் சர்வதேச போர் நிறுத்த கண்காணிப்பு குழுவினருக்கும் இடையிலான பேச்சுக்களின் முடிவில் மனிதாபிமான அடிப்படையில் நீரைத் திறந்து விடுவதற்கு விடுதலைப் புலிகள் முடிவு செய்கின்றார்கள்.

இதனடிப்படையில் 06.08.2006 அன்று அணையைத் திறப்பதற்காகச் சென்ற திருகோணமலை மாவட்டத்தின் அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலனும் சர்வதேச கண்காணிப்புக் குழுவினரும் சிறீலங்காப் படையினரின் கடுமையான எறிகணைத் தாக்குதலுக்கு இலக்காகின்றனர். எழிலனும், கண்காணிப்புக் குழுவினரும் மயிரிழையில் உயிர்தப்புகின்றனர். பின்னர் 08.08.2006 மாலை ஐந்து மணிக்கு அணை திறந்துவிடப்பட்டது.

எனினும் தமது போர் நடவடிக்கையை கைவிடாத சிறீலங்கா இராணுவம் அணையை ஆக்கிரமிக்கும் நோக்குடன் மாவிலாறு நோக்கி மறுநாள் ஒன்பதாம் திகதி காலை நகர்வை மேற்கொண்டனர். அந்த நகர்வு விடுதலைப் புலிகளால் கடும் தாக்குதல் மூலம் முறியடிக்கப்பட்டதையடுத்து, மறுநாள் 10ம் திகதியும் பெரும் எடுப்பில் படை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதன்போது 40ற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டதுடன், மேலும் பல படையினர் படுகாயங்களுக்கு உள்ளானார்கள். இந்த முயற்சியும் தோல்வியடைந்ததையடுத்து கடுமையான விமானத் தாக்குதல்களைத் தொடங்கிய படையினர் அணைக்கட்டை தாக்கியழிக்கும் நோக்குடன் அதனை இலக்கு வைத்தும் கடுமையான வான் தாக்குதலை நடத்தினர்.

இதற்கு பதிலடியாக 12ம் திகதி விடுதலைப் புலிகளின் கிட்டு பீரங்கிப் படையணி திருகோணமலைத் துறைமுகம் மீது கடுமையான ஆட்டிலெறித் தாக்குதலை நடத்தியது. எனினும்,தொடர்ச்சியாகதரைவழியாக முன்னேற படையினர் முனைந்தனர். இவர்கள் மீது விடுதலைப் புலிகளின் அணிகள் சிறப்பாக தாக்குதல் நடத்துகின்றார்கள். காட்டுப்பகுதியில் பொறிவெடி, மிதிவெடி என்பவற்றில் படைகள் சிக்கி பெரும் இழப்புக்களைச் சந்திக்கின்றார்கள்.

திருகோணமலையில் படையினருக்கு ஏற்பட்டு வந்த தொடர்ச்சியான பேரிழப்புகள் விடுதலைப் புலிகளின் பலம் குறித்த அச்சத்தை இராணுவத்தினர் மத்தியில் ஏற்படுத்துகின்றது. மிகக் குறுகிய காலத்தில் பல படை முகாம்களைத் தாக்கியழித்து விடுதலைப் புலிகள் மிக வேகமாக முன்னேறியது எதிர்காலத்தில் படையினருக்கு பெரும் அழிவுகளை ஏற்படுத்தும் என்பதை சிங்கள தரப்பிற்கு உணர்த்தியது.

கருணாவின் பிரிவும், சமாதான காலமும் விடுதலைப் புலிகளின் பலத்தை பெருமளவில் குறைவடைய வைத்திருக்கும் என்று நம்பிய படையினருக்கு மட்டுமல்ல, சிங்கள அரச தலைமைக்கும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதுவே, திருகோணமலையில் இருந்து விடுதலைப் புலிகளை அகற்றவேண்டும் என்ற எண்ணத்தை சிங்கள தலைமையான மகிந்தவின் ஆழ் மனதில் உருவாக்கியது எனலாம்.

இத் தாக்குதலைத் தொடர்ந்து திருகோணமலையில் சிறீலங்கா கடற்படையினரின் மிதக்கும் மினிமுகாம் எனப்படும் அரசின் டோறா கலங்கள் விடுதலைப் புலிகளின் கடற்புலிகளால் தாக்கி அழிக்கப்படுகின்றன. திருகோணமலை துறைமுகத்தின் நிலை கேள்விக்குள்ளாகின்றது. இது பன்னாட்டு வணிக நடவடிக்கைகளில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்துகின்றது.

அதாவது திருகோணமலைக்கு வரும் வணிகக் கப்பல்கள் அங்கு வர மறுக்கின்றன. இது சிறீலங்கா அரசிற்கு பெரும் சிக்கலை உண்டாக்கியது. குறிப்பிட்டுக் கூறுவதானால் துறைமுகம் சிறீலங்கா இராணுவத்தின் கைகளில் இருந்தாலும், திருகோணமலைக் கடல் கடற்புலிகளின் ஆதிக்கத்தில் இருக்கின்றது என்பது உறுதியாகின்றது. இது சிறீலங்காவினை விட அருகிலுள்ள இந்தியாவிற்கு பெரும் அச்சத்தை ஏற்படுத்தியது.




ACTION CONTRE LA FAIM

தொடரும்...

## பாதிக்கப்பட்ட விவசாயிகளின் குரலாக பாராளுமன்றத்தில் ஒலித்த ஹரீஸ் எம்.பி

அண்மையில் அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தினால் அறுவடைக்கு தயாராக இருந்த நெற்செய்கை அழிந்தது மட்டுமல்லாமல் ஆயிரக்கணக்கான விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். இது சம்பந்தமாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவை சந்தித்து உடனடியாக நஷ்ட ஈட்டை வழங்குமாறு கோரியிருந்தேன். அதற்கான படிவத்தை பெற்று இப்போது விவசாயிகள் மும்முரமாக நிரப்பிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அரசாங்கம் வழங்க தயாராகஉள்ளநஷ்டஈடு அவர்களுக்கு போதுமானதாக இல்லை. அவர்கள் முதலீடு செய்த தொகைக்கு ஓரளவு ஈடுகொடுக்கக்கூடிய அளவுக்காவது அவர்களுக்கான நஷ்ட ஈடு வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

வெள்ளிக்கிழமை (09) நடைபெற்ற பாராளுமன்ற அமர்வில் உரை நிகழ்த்திய அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்தும் உரையாற்றிய அவர், நான் பிரதிநிதித்துவப்படுத்தும் அம்பாறைமாவட்டத்தில்அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் பல்லாயிரம் ஏக்கர் காணியில் செய்கை செய்யப்பட்டு அறுவடைக்கு தயாராக இருந்த நெற்செய்கை பாதிக்கப்பட்ட விடயத்தை இந்த சபைக்கு கொண்டு வரவேண்டிய கடமை எனக்கு இருக்கிறது. அந்த வகையில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு முறையான நஷ்ட ஈட்டை கோருகிறேன்.

அதேபோன்று இந்த வெள்ள அனர்த்தம் காரணமாக நீர்ப்பாசன திணைக்கள குளக்கட்டுக்கள், பண்டுகள், மதகுகள், அடங்கலாக பல கட்டுமானங்கள் அம்பாறையில் சேதமடைந்துள்ளன. இதனால் அடுத்த போகத்திற்கான விவசாய நடவடிக்கையில் ஈடுபட முடியாத துர்ப்பாக்கிய நிலையில் விவசாயிகள் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவற்றை மீள புனரமைக்க 4 ஆயிரம் மில்லியன் ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

நானும் உட்பட இசாக் ரஹ்மான், பைசால் காசிம் போன்ற எம்.பிக்கள் ஜனாதிபதியை சந்தித்து இது சம்பந்தமாக பேசியிருந்தோம். அந்த நிதியை நீர்ப்பாசன அமைச்சர் உடனடியாக ஒதுக்கீடு செய்து புனரமைப்பு வேலைகளை துரிதமாக முடிக்க நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள் விடுக்கிறேன் என்றார்.
- நூருல் ஹுதா உமர்



# இளைய சமூகத்தினரும், சமூகவலைதளங்களும்

இன்றைய காலத்தில் இணையத்தில் பரிட்சயமான பெரியவர்கள் முதல், கணினியை கையாளத்தெரிந்த சிறு பிள்ளைகள் வரை ஒரு சேர தற்பெருமை அடித்துக்கொள்ளும் களம் தான் இந்த சமூக வலைத்தளங்கள். இதில் நட்புறவுகள் மேம்படுத்தல், தகவல் பரிமாற்றங்கள் போன்ற சில பயன்கள் இருந்தாலும், மேலோங்கி நிற்பது அவரவர்களின் தற்பெருமைகளே. அமெரிக்காவின் ஒரு பல்கலைக்கழக ஆராய்ச்சியின் மூலம் மேற்படி கூற்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

**இதன் வரலாறு என்ன?**

மின் அஞ்சல் உருவான காலத்திற்கு பிறகு, அமெரிக்காவின் மின்னஞ்சல் நிறுவனமான AOL (America OnLine, தன்னுடைய வாடிக்கையாளர்களை கவரும் வகையில், அலைபேசியில் உள்ள குறுஞ்செய்தி போன்று, மின் அஞ்சல் முகவரிகளுக்கிடையே பரிமாறிக்கொள்ளும் வகையில் ஒரு குறுஞ்செய்தி தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தியது. நாளடைவில் மின் அஞ்சல் முகவரியுடன் சில தகவல் குறிப்புகளையும் ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொள்ளும் படியும் பிறகு அவரவர்களுக்கு உரிய சில தொகுப்புகளையும் சேமித்து வைத்து பிறருடன் பகிர்ந்துகொள்ளவும் என வளர்ந்து தற்போது, அனைத்து இளைஞர் சமுதாயத்தையும் ஆக்கிரமித்து நிற்கின்றது.

**பயன்கள் என்ன?**

முதலாவதாக இணையவழி விளம்பரப்படுத்தும் நிறுவனங்களுக்கே இது பெரிதும் பயன்படுகின்றது. அதாவது ஒவ்வொரு உறுப்பினர்களின் சுய தகவல்கள் மற்றும் அவர்களுடைய இருப்பிடம், விருப்பமானவைகள், அவர்கள் இணையத்தில் தேடும் தகவல்கள் அல்லது உலவும் பக்கங்களை வைத்து, அதற்கு தொடர்புடைய நிறுவனங்களின் விளம்பரங்களை அவர்களிடத்தில் சேர்க்கின்றது.

 தொழில் புரிவோர் மற்றும் அலுவல்களில் உள்ளோர்க்கு, தாங்கள் தொடர்புகொள்ள வேண்டிய நபர்களை தொடர்புகொண்டு, தகவல் பரிமாற்றங்கள் மற்றும் காணொளி சந்திப்புகள் மூலம் தங்களின் குறைவான நேரத்தில் அதிக உற்பத்தி திறனை ஏற்படுத்திக்கொள்ள பயன்படுகின்றது. மாறாக இளைஞர்களுக்கு இதன் மூலம் எந்த உற்பத்தி திறனும் கூட வழியில்லை.

 நட்புறவுகள் அதிகமாக்கிக்கொள்ள பயன்படுகின்றது. இருப்பினும் புதிய நன்பர்களின் குணநலன்கள் பற்றி உறுதியாக சொல்ல முடியாது. அதை அறிந்துகொள்ள பல காலம் செல்லும். காரணம் யாவரும் தன்னுடைய நல்ல பக்கங்களையே பகிர்ந்துகொள்கின்றனர். அவர்களின் தவறான முகங்கள், பொதுவில் வைக்கப்படாமல், தனிப்பட்ட மின்னஞ்சல்கள் மற்றும் அழைப்புகளின் மூலமே தெரியவரும்.

 சமூக ஆர்வளர்கள் தங்கள் கருத்துக்களை, செய்திகளை மக்களிடம் சென்று சேர்க்க பயனுள்ளதாக இருக்கின்றது.

 பயனுள்ள தகவல்களை தேடும் ஒருவர், தங்களுக்கு கிடைத்த சில தகவல்களை பிறருடன் பகிர்ந்துகொள்ள உதவுகின்றது.

**தீமைகள் என்ன?**

 முதலாவதாக இளைஞர் சமுதாயத்தில் பலரை தற்பெருமை மிக்கவர்களாக உருவாக்குகின்றது. தங்களின் இயல்பான வாழ்க்கையில் நிகழும் நிகழ்ச்சிகளை, புகைப்படம், குறும்படம் மூலம் பகிர்ந்துகொள்ளுதல் என்பது ஏற்றுகொள்ளக்கூடியதாக இருந்தாலும், அதைவிட அதிகமாக தன் நிலைமைக்கு மீறிய இயல்பு வாழ்க்கைக்கு புறம்பான ஒரு பெருமை உலகை காண்பிக்கும்



வகையிலேயே தகவல்கள் பதியப்படுகின்றது. பிறருடைய புகைப்படம் மற்றும் தகவல்கள் மூலம், தன்னிலைக்கு மீறிய வாழ்க்கை தரத்தை வாழ முறுப்படுத்துகின்றது. இதனால் பெற்றோர்களுக்கும், பிள்ளைகளுக்கும் இடையே மன உளைச்சலையே விதைக்கின்றது.

 வங்கிகளில் நம் அடையாளத்தை உறுதிசெய்துகொள்ள பயன்படுத்தும் பிறந்த நாள் மற்றும் பலவித இரகசியம் பேணப்பட வேண்டிய தகவல்களையும் பொதுவில் வைத்து விடுகின்றோம். இதனால், தகவல் திருட்டு மூலம் பலவிதமான இழப்புகள் ஏற்பட காரணமாக அமைகின்றது.

 நாம் பொதுவில் வைக்கும் தகவல்களை பயன்படுத்தி நாமே அறிந்திராத சில தீயவர்கள், நம் நண்பர்களிடமோ, உறவினர்களிடமோ மோசடிகள் செய்வதற்கு வழிவகுக்கின்றது.

 மாணவர்கள், தகவல் பகிர்தல், இணையவழி விளையாட்டுக்கள் என சமூக வலைத்தளங்களில் அதிகமான நேரங்கள் செலவிடுகின்றனர். இதனால் அவர்கள் தங்களின் கல்விக்காகவும், உடற்பயிற்சிக்காகவும் உரிய நேரங்கள் அளிப்பதில்லை. அதன் மூலம் கல்வி நிலையில் பின்னடைகின்றனர். மேலும் உடற்பயிற்சிக்குரிய விளையாட்டுகளில் ஈடுபடாததாலும், அதிகமான நேரம் கணினி அல்லது அலைபேசியினை உற்று நோக்குவதாலும், கண் பாதிப்புகளும் ஏற்படுகின்றது. மனதளவிலும் அவர்களின் எண்ணங்கள் எப்பொழுதும் அதையே சிந்திக்கின்றதாக உளவியல் நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

 இந்த சமூக வலைத்தளங்கள் புகைப்பிடித்தல் போன்று மாணவர்களை தன்வயப்படுத்தி, அவர்களின் அன்றாட நிகழ்வுகளிலிருந்தும் பிரித்து வைக்கின்றது. அவர்களின் அதிகமான நேரங்களை ஆக்கிரமித்து, அவசியமான காரியங்களையும் கூட பிற்படுத்தவும், மறக்கவும் செய்கின்றது.

 சிலர் அன்றாட நிகழ்வுகளை பகிர்தல் மூலம், தீயவர்கள் பலவித மோசடிகள் செய்கின்றனர். ஒரு வீட்டில் கொள்ளையடிக்கப்பட்டதை ஆராய்ந்த காவல் துறையினர், கொள்ளை அடித்தவர்களை கண்டுபிடித்து விசாரணை செய்கையில், அந்த வீட்டு பெண், சமூக வலைத்தளத்தில் தாங்கள் விடுமுறை சுற்றுப்பயணம் செல்வதாகவும், குறிப்பிட்ட சில தினங்களுக்கு வெளியூரில் இருப்பதாக பகிர்ந்திருந்ததையும் வைத்து, அந்த வீட்டில் யாரும் இருக்க வழியில்லை என்று உறுதிபடுத்திக்கொண்டு, கொள்ளை அடித்தோம் என்பதாக கூறியுள்ளனர்.

 வீட்டிற்கு வந்திருக்கும் உறவினர்களுடன் கலந்துரையாடாமல், உறவாடாமல், எப்பொழுதும் இணையத்திலேயே ஒன்றியிருக்க செய்து, உறவினர்களை இழக்க செய்கின்றது.

**சில புள்ளி விபரங்கள்**

 சமூக வலைத்தளங்களில் ஈடுபடும் 69% இளைஞர்கள், இணையவழி நன்பர்களை இனியவர்களாக நினைக்கின்றனர். மாறாக 88% அவர்கள் சராசரியாகவோ அல்லது தவறான எண்ணம் உள்ளவர்களாகவோ இருக்கின்றனர்.

 சமூக வலைத்தளங்களில் ஈடுபடும் 65% இளைஞர்கள், அவர்களை பற்றி அவர்களே பெருமைபட்டுக்கொள்கின்றனர்.

 சமூக வலைத்தளங்களில் ஈடுபடும் 41% இளைஞர்கள், புதிய நண்பர்கள் மூலம் ஏதாவது ஒரு மன உளைச்சலுக்கு உள்ளாகின்றனர்.

 சமூகவலைத்தளங்களில் ஈடுபடும் 25% இளைஞர்கள், நேருக்கு நேர் ஆரோக்கியமில்லா வாக்குவாதங்களில் ஈடுபடுகின்றனர்.

 சமூகவலைத்தளங்களில் ஈடுபடும் 22% இளைஞர்கள், தங்களின் பழைய நட்புகள் சில முறிந்துவிட்டதாக ஒப்புக்கொண்டுள்ளனர்.

 சமூகவலைத்தளங்களில் ஈடுபடும் 22% இளைஞர்கள், தங்களுக்கு பிடித்தமான சமூகவலைதளத்தை, ஒரு நாளைக்கு 10 முறையாவது திறக்கின்றனர்.

**சமூக ஊடகங்களில் நண்பர்கள் அதிகமா?**

உலகில் எந்த வயதினர் அதிகத் தனிமையை விரும்புகிறார்கள்? பலரும் முதுமைப் பருவத்தைக் குறிப்பிடலாம். ஆனால், உண்மை அதுவல்ல. மற்ற எல்லா வயதினரையும்விட இளைஞர்கள்தாம் தனிமையை அதிகமாக உணர்கிறார்களாம். பிபிசி சமீபத்தில் நடத்திய ஆய்வு முடிவு இதைத் தெரிவித்திருக்கிறது. 'பிபிசி தனிமைச் சோதனை' (BBC Loneliness Experiment) என்ற பெயரில் நடத்தப்பட்ட இந்த ஆய்வில் சுமார் 55,000 பேர் பங்கேற்றனர். இதில் 16 வயதிலிருந்து 24 வயதுக்கு உட்பட்ட 40 சதவீதம் பேர் தனிமையை அதிகமாக உணர்வதாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

பொதுவாக, வயதானவர்கள்தாம் தனிமையால் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள் என்ற கருத்து நிலவும் நிலையில், இந்த ஆய்வு இளைய தலைமுறையினர் தனிமையால் அதிகமாகப் பாதிக்கப்படுவதாகத் தெரிவித்திருக்கிறது. அனுசரணையான பெற்றோர்கள், பள்ளி, கல்லூரி நண்பர்கள் எனப் பல தரப்பினர் சூழ்ந்திருந்தாலும் தனிமையை உணர்வதாக இளைஞர்கள் தெரிவித்திருக்கிறார்கள். மற்றவர்களுடன் பழக முடியாத காரணத்தாலேயே இளைஞர்கள் தனித்திருப்பதாக ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.

அதுமட்டுமல்ல, சமூக ஊடகங்களும் இளைஞர்களின் தனிமை உணர்வை அதிகப்படுத்தியிருக்கின்றன. வைஃபை காலத்து இளைஞர்கள் பெரும்பாலான நேரத்தைச் சமூக ஊடகங்களில்தான் கழிக்கிறார்கள். இந்தப் பழக்கம் அவர்கள் மனநிலையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் இந்த ஆய்வு தெரிவிக்கிறது. இணையத்தில் இப்படி அதிக நேரத்தைச் செலவிடுவதால் தனிமை, சமூகம் சார்ந்த பயம், மன அழுத்தம் போன்றவற்றால் இளைஞர்கள் பாதிப்படைவதாகவும் ஆய்வு நிபுணர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

குறிப்பாக, சமூக ஊடகங்களில் அதிகமான நண்பர்களைக் கொண்டிருப்பவர்கள்தாம் தனிமையால் அதிகமாகப் பாதிக்கப்படுவதாக இந்த ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தனிமை உணர்வால் பாதிக்கப்பட்ட இளைஞர்கள், நபர்களை நேருக்கு நேர் சந்தித்து உரையாடுவதைத் தவிர்ப்பதாகவும் ஆய்வில் தெரிவித்துள்ளார்கள்.

சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதில் நேர்மறை அம்சங்கள் இருந்தாலும், ஏற்கனவே தனிமை உணர்வில் சிக்கித் தவிக்கும் இளைஞர்களால் அவற்றை நேர்மறையாகப் பயன்படுத்த முடியவில்லை. மனிதர்களை நேருக்கு நேர் சந்தித்துப் பேசும் வழக்கத்தை இந்தத் தலைமுறை வளர்த்துக்கொள்ளவேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள் ஆய்வு நிபுணர்கள். சமூக ஊடகப் பயன்பாட்டைச் சரியாக வரைமுறைப்படுத்துவதன் மூலமே இளைஞர்களால் தனிமை உணர்விலிருந்து வெளியேற முடியும் என்று ஆய்வு முடிவு தெரிவித்திருக்கிறது.

**தீர்வு என்ன ?**

 பள்ளிகூட மாணவர்களை வாரத்திற்கு ஒன்று அல்லது இரண்டு மணிநேரத்திற்கு மேல், இதுபோன்ற சமூக வலைத்தளங்களை பார்வை இடுவதை தடுக்க வேண்டும்.

 சமூக வலைத்தளங்களின் விளையாட்டுகளிலிருந்து திசைதிருப்பி உடற்பயிற்சி ஏற்படுத்துகின்ற ஆரோக்கியமான விளையாட்டுகளில் ஈடுபடுத்தவேண்டும்.

 நம்மை பற்றிய அனைத்து உண்மை தகவல்களையும் பகிர்தலை தவிர்க்க வேண்டும்.


 நம் தகவல்கள் நம்முடைய நட்பு வட்டத்திற்கு மட்டுமே அனுமதிக்கும் படி சமூக வலைத்தளங்களின் நிரல்களை வகுத்துக்கொள்ளவேண்டும்.

இந்த நூற்றாண்டில் உலகளாவிய முறையில் எங்கெல்லாம் மனித சஞ்சாரம் இருக்குமோ அங்கெல்லாம் மின்னனுவியல் (electronics) தகவல் சாதனங்கள் காணப்படுகின்றன.

தகவல் உச்சமான தற்போதைய தசாப்தத்தில் தொழிநுட்ப முன்னேற்றங்கள் எவ்வாறு எமது அன்றாட வாழ்க்கையில் பலனையும், பாதகங்களையும் உண்டாக்கலாம் என ஒரு சில நிமிடங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இது நமது குடும்பத்திற்கும் உடல் மற்றும் உள நலத்திற்குப் பயனாகவும், மன நிம்மதியைத் தரவும் வழிவகுக்கும்.

**மறவன்**

# நாட்டு நலனுக்காக பொதுவான ஒருமித்த கருத்துடன் இணையுங்கள்!



**ஒன்பதாவது பாராளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத் தொடரை (07) அன்று ஆரம்பித்து வைத்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஆற்றிய கொள்கை விளக்க உரை.**

ஆரம்பம் முதல் இன்று வரை உலகம் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்தது. நாடுகள் நெருக்கடிகளைச் சந்தித்தன. தனிப்பட்ட வாழ்க்கையிலும் நெருக்கடி ஏற்பட்டது. சில சமயங்களில் நெருக்கடியிலிருந்து விடுபட முடிந்தது. வேறு சில சந்தர்ப்பங்களில், நெருக்கடியிலிருந்து மீள முடியவில்லை. நெருக்கடியைச் சபித்துக் கொண்டிருப்பதன் மூலம் நெருக்கடியிலிருந்து மீள முடியாது. நெருக்கடிக்கான காரணங்களை விமர்சிப்பதன் மூலம் மீள முடியாது. நெருக்கடிகளைச் சரியாக நிர்வகிப்பதன் மூலம் தான் உலகமும் நாடுகளும் தனிப்பட்ட வாழ்க்கையிலும் நெருக்கடிகளைத் தீர்க்க முடிந்துள்ளது. நெருக்கடி முகாமைத்துவத்தில் அடிப்படை என்னவாக இருக்க வேண்டும்?

புத்தபிரான் போதித்த ஒரு போதனையை இங்கு மேற்கோள் காட்ட விரும்புகிறேன். "அத்ததீபா - விஹரத" தங்களுக்குத் தாங்களே ஒளியாக வாழ வேண்டும். நெருக்கடியைச் சமாளிக்கும் செயல்முறை தன்னிடமிருந்தே ஆரம்பிக்க வேண்டும். உலகில் எங்கும் ஏனையவர்களைக் குறைகூறி நெருக்கடியைச் சமாளித்தது கிடையாது. எம்மை எமக்கான ஒளியாக மாற்றாவிட்டால், நம் எண்ணங்களையும் கருத்துக்களையும் சீர்செய்யாவிட்டால், நமக்கு நன்மை நடக்காது. நாட்டுக்கு எந்த நன்மையும் இல்லை. நெருக்கடிக்கும் தீர்வு இல்லை.

முறைமையில் மாற்றம் இருக்காவிட்டால் சிஸ்டம் சேஞ்ச் பற்றி தொண்டைக் கிழியக் கத்தினாலும் நாம் அடிப்படையில் இருந்து மாறாவிட்டால் முறைமையை மாற்ற எம்மால் முடியாது. அதனைச் சுட்டிக்காட்டும் வகையில் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் பற்றிய பல விடயங்களை இச்சபையில் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். 2022 பெப்ரவரியில் இந்த நாடு இருந்த நிலை, நம் அனைவருக்கும் நினைவில் இருக்கும். 2023 பெப்ரவரி மாதமளவில், இந்த நாட்டை ஒரு சிறந்த நிலைக்கு கொண்டு வர முடிந்தது. இந்த வருடம் பெப்ரவரியாகும் போது கடந்த ஆண்டு பெப்ரவரி மாதத்தை விட சிறந்த நிலைக்கு நாடு முன்னேறியுள்ளது. கடந்த ஆண்டு பெப்ரவரி மற்றும் இந்த பெப்ரவரி வரையான நமது பொருளாதார குறிகாட்டிகள் சிலவற்றை நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

கடந்த ஆண்டு பணவீக்கம் 50.06 சதவீதமாக இருந்தது. இன்று அது 6.4 சதவீதமாக குறைந்துள்ளது. உணவுப் பணவீக்கம் 54.4 சதவீதமாக உள்ளது. இன்று அது 3.3 சதவீதமாக உள்ளது. அன்று ஒரு டொலரின் பெறுமதி 363 ரூபாய். இன்று 314 ரூபாய். 2022 ஆம் ஆண்டின் இறுதியில், வரவு செலவுத் திட்ட முதன்மை பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.7 சதவீதமாக இருந்தது. ஆனால் 2023 இல் முதன்மை வரவு செலவுத் திட்டத்தில் உபரியை ஏற்படுத்த முடிந்தது. சுதந்திரத்திற்குப் பின்னரான 76 வருடங்களில் இலங்கையானது முதன்மையான வரவு செலவுத் திட்ட உபரியை ஏற்படுத்திய 6 ஆவது சந்தர்ப்பம் இதுவாகும். 2022 ஆம் ஆண்டின் இறுதியில், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.9 சதவிகிதம் இருப்புப் பற்றாக்குறை காணப்பட்டது. 2023 ஆம் ஆண்டின் இறுதியில், எங்களால் உபரியை ஏற்படுத்த முடிந்தது. 1977ஆம் ஆண்டுக்குப் பிறகு நிலுவைத் தொகை உபரியை ஏற்படுத்திய முதல் சந்தர்ப்பம் இதுவாகும். 2023 இல் 28 சதவீதமாக இருந்த வட்டி விகிதம் தற்போது 12 சதவீதமாக உள்ளது.

2022 ஆம் ஆண்டின் இறுதியில், 52 பிரதான அரச நிறுவனங்கள் 745 பில்லியன் ரூபா நட்டம் ஈட்டின. செப்டம்பர் 2023இற்குள், இந்த 52 நிறுவனங்களும் 313 பில்லியன் ரூபாய் லாபம் ஈட்டியுள்ளன. ஆனால் இந்நிறுவனங்கள் கடன் சுமையை தாங்க முடியாத நிறுவனங்களாக காணப்படுகின்றன. தெரிவுசெய்யப்பட்ட கடனைச் செலுத்த முடியாத நிலையை 2022 ஏப்ரல் 12 ஆம் திகதி இலங்கை உத்தியோகபூர்வமாக அறிவித்தது. அந்த சமயம் எமது அந்நியச் செலாவணி கையிருப்பு பூஜ்ஜியம் வரை சரிந்தது. தற்போது அந்த நிலை மாறிவிட்டது. 2023 டிசம்பர் நிலவரப்படி, நமது அந்நியச் செலாவணி கையிருப்பு 4.4 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். குறுகிய காலத்தில், சுற்றுலாத் துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளோம். 2022 ஆம் ஆண்டில் நம் நாட்டிற்கு வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 194,495 ஆகும். 2023 இல் அந்த எண்ணிக்கையை 1,487,303 ஆக அதிகரிக்க முடிந்தது. இந்த ஆண்டு ஜனவரியில் 200,000 இற்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்தனர்.

மேலும், 2023இல் பல சாதகமான நகர்வுகளை முன்னெடுத்தோம். கோட்டா முறையில் வழங்கப்பட்ட எரிபொருள் விநியோக முறை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. தற்போது தொடர்ந்து மின்சாரம் விநியோகிக்கப்படுகிறது. எரிபொருள் தட்டுப்பாடு இல்லை. விவசாயத்திற்குத் தேவையான உரங்கள் தட்டுப்பாடின்றி கிடைக்கிறது. மீனவர்களுக்கு எரிபொருள் தட்டுப்பாடு இல்லை. வாகனங்கள் தவிர அனைத்து இறக்குமதி கட்டுப்பாடுகளும் இப்போது நீக்கப்பட்டுள்ளன. நாட்டுக்கு அத்தியாவசிய உணவு மற்றும் மருந்துகளை இறக்குமதி செய்வதில் எந்த பிரச்சினையும் இல்லை. மேலும், உற்பத்தித் தொழிற்துறைகளுக்குத் தேவையான மூலப் பொருட்களின் விநியோக வலையமைப்பில் எந்தத் தடையும் இல்லை. 2022 ஆம் ஆண்டின் இறுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 7.8 சதவிகிதமாக சுருங்கியது. 2022 முதல், தொடர்ந்து 6 காலாண்டுகளில் எதிர்மறையாக இருந்தது. ஆனால் 2023ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் 1.6 சதவீத வளர்ச்சியை எட்டினோம்.

நமது பொருளாதாரம் விண்கல் வேகத்தில் சரிந்தது. ஆனால் தற்போது எமக்கு அதனை மாற்ற முடிந்துள்ளது. அதை மீண்டும் ரொக்கெட் வேகத்தில் உயர்த்தியுள்ளோம். நாங்கள் வீ (V) வடிவ மீட்பு அல்லது வீ (V) வடிவ மீட்சியைப் பெற்று வருகிறோம். நாம் அடைந்த விசேடமான வெற்றியாக அதனைக் குறிப்பிடலாம். வீழ்ச்சியடைந்த நாடுகளின் பொருளாதார மீட்சி மிகவும் கடினமானது மற்றும் வேதனையானது. ஆனால் ஏனைய நாடுகளைப் போல நீண்ட கால சிரமங்கள் மற்றும் வலிகள் இல்லாமல் நமது பொருளாதாரத்தை மீட்டெடுக்க எம்மால் முடிந்தது.

நான் ஒரு உதாரணத்தைக் கோடிட்டுக் காட்டுகிறேன். கிரேக்கம் கடன் செலுத்த முடியாமல் 2009ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடியைச் சந்தித்தது. அதன்பின்னர் முழு நாடும் மிகவும் கடினமான சூழ்நிலையில் தனது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முயற்சித்தது. அந்தக் காலத்தில் பல நெருக்கடிகளைச் சந்தித்தது. மீண்டும் அந்தப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப சுமார் 10 வருடங்கள் தேவைப்பட்டது. நமது நாடு குறுகிய காலத்தில் இத்தகைய விதிவிலக்கான சாதனைகளை எட்டுவது உண்மையில் உலக சாதனையாகும். எங்களால் எப்படி அவ்வாறான சாதனை படைக்க முடிந்தது?

2022ஆம் ஆண்டு முழுவதும் பொருளாதாரம்சரிந்தது. 2022ஆம்ஆண்டை விட 2023இல் ஓரளவு பொருளாதார முன்னேற்றத்தை அடைய முடிந்தது. இது தற்செயலாக நடந்ததல்ல. மிகவும் கவனமாகவும் தொலைநோக்குடனும் தயாரிக்கப்பட்ட நுட்பமான பொருளாதாரக் கொள்கையை நடைமுறைப்படுத்தியதால் இந்த முன்னேற்றம் ஏற்பட்டது. மேலும், நாங்கள் தயாரிக்கும் கொள்கைகள், நடவடிக்கைகள், திட்டங்கள் அனைத்தையும் அவ்வப்போது நான் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தேன். மக்கள் முன்னிலையிலும் அவ்வப்போது பகிரங்கமாக அறிவித்தேன். பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் அவை பற்றி கலந்துரையாடவும் விவாதிக்கவும் வாய்ப்பு வழங்கப்பட்டது. அந்தக் கொள்கைகள் ஒருபோதும் மறைக்கப்படவில்லை. ஒவ்வொரு நடவடிக்கையையும் வெளிப்படைத்தன்மையுடன் செய்துள்ளோம்.

அரசியல் ஆதாயத்துக்காக நான் ஒருபோதும் முடிவுகளை எடுக்கவில்லை. ஒவ்வொரு முடிவையும் நாட்டு நலன் கருதியே எடுத்தேன். எமக்கு பாதகமாக இருந்தாலும் நாட்டுக்கு நன்மை பயக்கும் முடிவுகளை எடுக்க நாங்கள் தயங்கவில்லை. தனிப்பட்ட இலாபங்களை ஒதுக்கி வைத்துவிட்டு நாட்டுக்கு சரியான கொள்கைகளை செயற்படுத்தினோம். பாராளுமன்றத்திலுள்ள சில தரப்பினர் அந்த முடிவுகளை எதிர்த்தனர். ஆனால் பெரும்பான்மையானோர் தமது தனிப்பட்ட அரசியல் நலன்களையும் இலக்குகளையும் பொருட்படுத்தாமல் நாட்டின் நலனுக்காக அந்த முடிவுகளுக்கு ஆதரவாக கையுயர்த்தினர். எதிர்காலத்தில் தேசத்தின் பாராட்டை அவர்கள் பெறுவார்கள் என்று நான் நம்புகிறேன்.

நாங்கள் இந்தப் பயணத்தில் படிப்படியாக முன்னேறிச் சென்றோம். 2022ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக அன்றிருந்த நாட்டின் உண்மையான நிலைமையை நான் எடுத்துக் காட்டினேன். பொருளாதார வீழ்ச்சியைத் தடுப்பதே இடைக்கால வரவு செலவுத் திட்டத்தின் நோக்கமாக இருந்தது. 2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக பொருளாதாரத்தை நிலையான பாதைக்கு வழிநடத்தும் பல திட்டங்களை முன்வைத்தேன். பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்த தேவையான மறுசீரமைப்புகளின் ஆரம்ப கட்டமாக 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டன.

சிரமத்துடனும் சில சமயங்களில் தயக்கத்துடனும் நாங்கள் செயல்படுத்திய பொருளாதார மறுசீரமைப்புகள் மற்றும் கொள்கைகள் காரணமாக, நாங்கள் தற்போது நிலையான பொருளாதாரத்தை நிறுவுவதற்கான பாதைக்கு பிரவேசித்திருக்கிறோம். அத்தோடு சர்வதேச நிதி நிறுவனங்கள் எங்கள் இலக்குகள் மற்றும் பயணம் குறித்து மகிழ்ச்சியடைந்துள்ளன. இருண்ட பொருளாதார சுரங்கத்திற்குள் சிக்கியிருந்த நாம் தற்போது சுரங்கத்தின் முடிவில் வெளிச்சத்தைக் காண்கிறோம். தீவிர சிகிச்சைப் பிரிவில் இருந்த பொருளாதாரம் தற்போது ஆபத்தான நிலையில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் ஏற்பட்ட கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாக, நாட்டு மக்கள் பலர் நினைத்துப் பார்க்க முடியாத இன்னல்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. சிலர் தொழில்களை இழந்தனர். மேலும் சிலர் தங்கள் வருமான வழிகளை இழந்தனர். சிலர் தொழில் வாய்ப்புகளை இழந்தனர். இன்னும் சிலர் உரிமைகளை இழந்தனர். பெரும்பாலான துன்பங்கள் சாதாரண மக்களுக்குத்தான் சொந்தமானது. இழந்த வாய்ப்புகளை கொஞ்சம் கொஞ்சமாக மக்களுக்கு வழங்க தற்போது நாம் முயற்சிக்கிறோம். மக்களின் இழந்த உரிமைகளை மீட்டெடுக்கும் வேலைத் திட்டத்தை 'உரித்து' என்ற பெயரில் அண்மையில் ஆரம்பித்தோம். உரித்து வேலைத் திட்டத்தின் ஊடாக இரண்டு அடிப்படை விடயங்களில் கவனம் செலுத்தி வருகின்றோம். ஒன்று காணி மற்றது வீடு.

இங்கு காணி உரிமை பிரதான இடத்தைப் பெறுகிறது. 1897 தரிசு நிலச் சட்டத்தின் மூலம் மக்களின் காணி உரிமையை காலனித்துவப் பிரித்தானிய அரசு பெற்றது. சுதந்திரத்திற்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த எந்த ஒரு அரசாங்கமும், பறிக்கப்பட்ட காணி உரிமைகளை மக்களிடம் மீள வழங்குவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அந்த காணி உரிமையை மீள வழங்கும் பணியை நாம் ஆரம்பித்துள்ளோம். இரண்டு மில்லியன் மக்களை காணி உரிமையாளர்களாக எமது சமூகத்தில் இணைக்கின்றோம். இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் புரட்சிகரமான நகர்வாகும். அரிசியில் தன்னிறைவு பெற பல தசாப்தங்களாக விவசாயிகள் அனுபவித்த கடின உழைப்புக்கு வழங்கப்படும் ஒரு கௌரவமாகும்.

மேலும், இந்நாட்டு மக்களில் மூன்றில் ஒரு பகுதியினருக்கு முறையான வருமானம் கிடையாது. பொருத்தமான வீடு இல்லை. இந்த மக்களுக்கு வருமான வழி மற்றும் வீட்டு உரிமை வழங்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்போம். நகர்புர, குறைந்த வருமானமுடைய 50,000இற்கும் மேற்பட்டோருக்கு முழுமையான வீட்டுரிமை வழங்கப்படும். வெற்றிகரமான பொருளாதார அபிவிருத்திப் பாதையில் பயணிக்கும் போது நாட்டின் அனைத்துத் தரப்பினர் குறித்தும் விசேட கவனம் செலுத்தப்படவேண்டும். குறிப்பாக வறிய மற்றும் நிர்க்கதியான மக்கள் குறித்து கவனம் செலுத்த வேண்டும். கடுமையான பொருளாதார நெருக்கடியின் மத்தியிலும் மக்கள் நலனுக்காக நடவடிக்கை எடுத்தோம்.

தொடரும்...

**ஜனாதிபதி ஊடகப் பிரிவு**

# இளம் வயது பெண்களை அதிகம் பாதிக்கும் "முகப்பரு" – பாதுகாப்பு பெற சில வழிகள்



(பைஷல் இஸ்மாயில்)

இளம் வயதினரை அதிகம் பாதிக்கக்கூடிய ஒரு நோய் முகப்பருவாகும். இது பெண்களுக்கு அதிகம் ஏற்படும். பெரும்பாலும் விடலை பருவத்தை அடைகின்றவர்களுக்கு இது ஏற்படுகிறது. இதனைப் போக்க எண்ணற்ற முக கிரீம்களும், மருந்துகளும் இன்று அதிக விளம்பரத்துடன் வெளிவருகின்றன. ஆனால், அவற்றை வாங்கி இவர்கள் பயன்படுத்தும் முன், எதனால் இது ஏற்படுகிறது என்ற காரணத்தை தெரிந்து கொள்வது நல்லது.

**முகப்பரு எப்படி ஏற்படும்?**

தோலில், அதன் மேற்பரப்பு ஈரப்பசையுடன் இருக்க "சர்ம மெழுகு சுரப்பிகள்" உள்ளன. இவை "சர்ம மெழுகை உற்பத்தி செய்யும். இதில் பல்வேறு கொழுப்பு அமிலங்களும் அடங்கி இருக்கும். இவை தோலை மிருதுவாகவும், பசையுடனும் இருக்க உதவுகின்றன. சாதாரணமாக இது சுரக்குமளவு அதிகரித்தாலும், தோல் துளை மூடிக்கொண்டுவிட்டாலும் "முகப்பரு" எளிதில் ஏற்பட்டுவிடும். "முடி" உள்ள இடங்களில் இது போன்ற நிலை ஏற்படுவதில்லை.

**எங்கெல்லாம் தோன்றும்?**

பெரும்பாலும் இது முகத்தில் தோன்றும். என்றாலும் கழுத்து, நெஞ்சின் முன்பகுதி, தோள்பட்டை பகுதி, பின்புறம் ஆகிய இடங்களிலும் இது ஏற்படலாம். சிலருக்கு இது தொடையிலும் குதப்பகுதியிலும் தோன்றும்.

**தோலில் தோன்றும் மாற்றங்கள்**

முதலில் இந்தப் பருக்கள் தொடங்கும் போது அவை சிறிய வெண்ணிறமான முகடு கொண்ட பருக்களாக தோன்றும். இதில் சர்ம மெழுகும், தோலடி செல்களும், செதில்களும் கலந்திருக்கும். இவை தோலின் துளையை அடைத்து தோலுக்கு வெளியே சிறிதாக நீட்டிக் கொண்டிருக்கும்.

அதன் பிறகு, வெண்ணிற முகடு கொண்ட பருக்களிலுள்ள "சல்பர்" என்ற பொருள் "சல்பைட்டு" என்ற பொருளாக மாறிவிடும். இதன் காரணமாக வெண்ணிற முகடு கொண்ட பருக்கள் கரிய முகடுகளாக மாறிவிடும். இந்த நிலையில் இவற்றை பிதுக்கி வெளியேற்றினால் இவை வெளியே வரும். அதன் உட்பகுதியில் மஞ்சள் நிறமான வெண்ணெய் வெளிப்படும்.

இவற்றை விட்டு விட்டால் நீண்ட காலமாக இவை எவ்வித மாற்றமும் இல்லாமல் இருக்கும். இந்த பருக்களைச் சுற்றி செந்தடிப்புத் தோன்றும். பிறகு அந்த இடத்தில் சிறிய வட்ட வடிவ கொப்பளங்கள் தோன்றும். வெண்ணிற பருக்களின் முகடுகள் "ரோஜா" சிவப்பாக மாறலாம்.

இவை பிற நுண்கிருமிகளின் பாதிப்பினால், பழுத்து, "சீழ்" ஏற்படலாம். உட்பகுதியிலுள்ள சீழ் கட்டியாகி, அவை தோலில் தடிப்பான கட்டிகளாகவும், கொப்பளங்களாகவும் தோன்றலாம். சில பகுதிகள் கன்னிப்போய் தோலையும் பாதிக்கும். குறிப்பாக இவற்றை கிள்ளி எடுக்கிறேன் என்று பிதுக்கும்போது தோல் பாதிக்கப்படும். இவ்வாறு அடிக்கடி ஓரிடத்தில் பருக்கள் தோன்றும்போது அந்த இடத்தில் அவற்றின் "வடுக்கள்" தோன்றி முக அழகை பாதிக்கும். சிலருக்கு, முகடுகள் வெளியே வந்தபின்பு கூட குழி குழியாக தோலின் பகுதியில் விழுந்து அது விகாரத்தை ஏற்படுத்தும்.

மேற்கூறிய பாதிப்புகள் கொஞ்சம், கொஞ்சமாகவும், படிப்படியாகவும் தோன்றி வரும். சிலருக்கு ஒரே நேரத்தில் மேற்கூறிய பல்வேறு அமைப்புகளுமே தோலில் ஏற்படவும் செய்யும்.

முகப்பரு தொந்தரவு ஒரே நாளில் தோன்றி முடியக்கூடிய விடயம் அல்ல. அது நீண்ட நாட்கள் வந்தவர்களுக்கு தொந்தரவுகளை ஏற்படுத்தும். பெண்களுக்கு குறிப்பாக, "மாதவிடாய்" தொடங்குவதற்கு முன்பாக இவை அதிகரிக்கும். விடலை பருவத்தில் அதிகமாக தோன்றினாலும் 20 வயதை நெருங்குகின்றபோது இதன் பாதிப்பு கொஞ்சம், கொஞ்சமாக குறைந்து வரும். முகத்தை குறிப்பாக யுவதிகளின் முகத்தை பாதித்து அவர்களின் மனநிலையையும் இது பெரிதும் பாதித்து விடுகிறது.

முகப்பருக்களில் பல்வேறு வகைகள் இருக்கின்றன. அதாவது,

**மழலைகளுக்கு வரும் முகப்பரு**

மழலைகளுக்கும், சிறுவர் சிறுமியர்களுக்கும் தோன்றும் முகப்பரு இவர்களுக்கு பெரும்பாலும் வெண்முகடு கொண்ட பருக்கள் முகத்தில் தோன்றும். இவர்களுக்கு அவை பழுக்காது கொப்பளங்களாகவும் உருவாகாது. பிறந்தவுடன் தாயின் ஹோர்மோனின் அளவு இவர்களது உடலில் மிகுந்திருப்பதே இதற்கான காரணம் என்று கண்டறியப்பட்டுள்ளது. மேலும், மிகவும் அடர்த்தியான எண்ணெய்யை இவர்களது மென்மையான தோலில் (தலையிலும், முகத்திலும்) தடவுவதாலும் இது ஏற்படலாம்.

**வயது முதிர்ந்தவர்களுக்கு ஏற்படும் முகப்பரு**

வயதானவர்களுக்கு, தனித் தனியாகவோ, மொத்தமாகவோ, முகப்பருக்கள் தோன்றலாம். இவை பெரும்பாலும் தலையின் பக்கவாட்டிலும், கண்களைச் சுற்றி அமைந்துள்ள பகுதியிலும் ஏற்படும்.

**பெரியவர்களுக்கு ஏற்படும் முகப்பரு**

இது முகத்திலும், உடலின் பிற பகுதிகளிலும் ஏற்படலாம். சாதாரணமாக தொடங்கி பல்வேறு நிலைகளிலும் இது பாதிப்புகளை ஏற்படுத்தலாம்.

**குறிப்பிட்ட வேலை பார்ப்பவர்களுக்கு ஏற்படும் முகப்பரு**

பல்வேறு இரசாயனத் தொழிற்சாலைகளில் பணிபுரிபவர்களுக்கு முகப்பரு தோன்றுவதுண்டு. குறிப்பாக, குளோரின் எண்ணெய் போன்றவற்றில் பணிபுரிபவர்களுக்கு முகத்திலும், உடலின் பல்வேறு பகுதிகளிலும் பருக்கள் தோன்றலாம்.

இதுபோன்று, பல்வேறு நாட்டு மருந்துகளை தலைக்கும், முகத்திற்கும் போடுவதாலும் முகப்பருக்கள் தோன்றலாம். சிலருக்கு முகத்தில் கொப்பளங்களும் ஏற்படும்.

**மருந்துகளால் ஏற்படும் முகப்பரு**

அயோடைட்ஸ், புரோமைட்ஸ் போன்ற மருந்துகளை பயன்படுத்துகின்றபோதும் முகப்பருக்கள் தோன்றலாம். இவை தோன்றும் பகுதிகளில் அரிப்பும் இருக்கும். ஆனால் இவை பெரிதாகி கட்டிகளாக மாறுவதில்லை.

பல்வேறு ஹோர்மோன் மருந்துகள் மற்றும் "ஸ்டிராய்டு" மருந்துகளாலும் முகத்தில் பருக்கள் தோன்றும்

குறிப்பாக "டெஸ்டோஸ்டிரான்" எனப்படும் ஆணின ஹோர்மோன் மருந்தை "மார்பக புற்றுநோய்க்காக" பெண்கள் பயன்படுத்துகின்றபோதும், ஸ்டிராய்டு வகை மருந்துகளை மூட்டு வாதத்திற்காக பயன்படுத்துகின்ற போதும் பெண்களுக்கு முகப்பருக்கள் தோன்றும்.

**முகப்பரு ஏற்படுவதற்கான காரணங்கள்**

முகப்பருக்கள் பெரும்பாலும் பருவமடைகின்றபோதுதான் அதிகமாக ஏற்படுகிறது. இதற்கு அந்த நேரத்தில் தோன்றும் "ஹோர்மோன்களே" காரணமென கருதப்படுகிறது.

குறிப்பாக, ஆணின் ஹோர்மோன் "டெஸ்டோஸ்டிரான்" மற்றும் பெண்ணின் ஹோர்மோன் "புரோஜஸ்டிரான்" ஆகியவற்றின் செயற்பாட்டினால் முகப்பருக்கள் அதிகமாக ஏற்படுகின்றன. இவை சர்ம (மெழுகு) எண்ணெய் சுரப்பிகளை பெரிதாக்கி விடுகின்றன. இதனால் அவர்களுக்கு அதிகமாக முகப்பருக்கள் ஏற்படும்.

தலையில் "பொடுகின்" தொந்தரவுகள் உள்ளவர்களுக்கும் "முகப்பரு" ஏற்படும். உணவில் அதிகமானளவு மாப்பொருட்கள், கொழுப்புச் சத்துப் பொருட்கள் ஆகியவற்றை சாப்பிடுகின்றவர்களுக்கு இது அதிகமாக ஏற்படும்.

மலச்சிக்கல் உடையவர்களுக்கும், உணவுக்குழல் ஜீரண பாகங்களில் முறைகேடுகள் உள்ளவர்களுக்கும் இது அதிகமாக ஏற்படும்.

உடற்பயிற்சி செய்யாதவர்களுக்கும் வேலைப்பளு அதிகமாக இல்லாதவர்களுக்கும் இது அதிகமாக ஏற்படும்.

முகத்தில் அதிகமாக எண்ணெய் பசை நிறைந்து கிரீம்களை தடவுவதாலும் முகத்தை அடிக்கடி தேய்ப்பதாலும் இது ஏற்படும்.

**முகப்பருவிற்கான சிகிச்சைகள்**

**பொது சுகாதாரம்**

இந்த பாதிப்புடைய பெண்கள் கடுமையாக வேதனைப்படுவார்கள். அய்யோ முகமே போச்சே என்று வருத்தப்படுவார்கள். முதலில் இதைப் போக்கவேண்டுமென வருத்தத்தாலும், அவர்களின் மன இறுக்கத்தாலுமே முகப்பருக்கள் அதிகரிக்கலாம். முகத்தை அடிக்கடி கழுவி சுத்தமாக வைத்திருக்க வேண்டும். உடலின் பொது ஆரோக்கியத்தை மேம்படுத்த வேண்டும்.

**விட்டமின் "ஏ" சிகிச்சை**

விட்டமின் "ஏ" தோலில் ஏற்படும் மாற்றங்களை தடுத்து நிறுத்தக்கூடியது என்று கருதப்படுவதால் இதனை தினமும் தொடர்ந்து பல வாரங்கள் எடுக்க வேண்டும்.

**ஹோர்மோன் சிகிச்சை**

மோசமாக முகம் பாதிக்கப்பட்டிருந்தால் சிலருக்கு இஸ்டிரோஜீன் ஹோர்மோனை தினமும் 1 மில்லி கிராம் என்றளவில் பெண்கள் எடுக்க வேண்டும். இது மாதவிடாய்க்கு முன்பாக ஏற்படும் முகப்பருக்களைத் தடுக்கும்.

ஆணினஹோர்மோனுக்குஎதிராக செயற்படக்கூடிய சைபிரோஸ்டிரோன் அஸிட்டேட் என்ற மருந்தை ஆண் பெண் இருவருக்கும் கொடுக்கலாம். கர்ப்பத்தடை மாத்திரைகளும் முகப்பருவை போக்க உதவும்.

**முகப்பரு வராமல் எப்படித் தடுக்கலாம்?**

இது ஒருவரிடமிருந்து மற்றவருக்கு பரவக்கூடியது அல்ல. எனவே, இது குறித்து கவலைப்படத் தேவையில்லை. இவர்கள் சில பொதுவான முன் யோசனைகளை கையாளுவது மிகவும் அவசியமாகும். இவர்களுக்கு நல்ல காற்றோட்டமான இடம் மிகவும் அவசியமாகும். மிதமான சூரிய ஒளி இவர்களுக்கு நல்லது.

திறந்த வெளியில் உடற்பயிற்சி செய்வது எளிமையான உணவுகளை உண்பது நல்லது. இவர்கள் உணவில் அதிகளவு பச்சை காய்கறிகளையும், பழங்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். கொழுப்பான உணவுகள், மாவு உணவுகள், பல்வேறு போத்தலில் விற்கப்படும் பானங்கள், கோப்பி, மது ஆகியவற்றை தவிர்த்துவிடவேண்டும். மலச்சிக்கல் இருப்பவர்கள் இதனை தவிர்க்கவேண்டும். முகத்தில் கண்ட கண்ட கிரீம்களை தடவக்கூடாது. தலையில் பொடுகுத் தொந்தரவு இருந்தால் அற்கான சிகிச்சையினை முறையாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

தினமும் பலமுறை முகத்தை வெதுவெதுப்பான நீரில் சோப்பிட்டு கழுவ வேண்டும். மாலை நேரத்தில் முகத்தை ஸ்பொன்ச் வைத்து ஸ்பிரிட்டால் துடைக்க வேண்டும். இரவு நேரத்தில் முகத்தில் கிரீம் போட்டுக்கொள்ளலாம்.

**வைத்தியர் முத்து செல்வகுமார்**
MD (Gen.Medi)

# விளையாட்டுச் செய்திகள்

## சாதனை படைத்த பெத்தும் நிஸ்ஸங்க



இலங்கை அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் பெத்தும் நிஸ்ஸங்க ஒருநாள் போட்டிகளில் 200 ஓட்டங்களை கடந்த முதல் இலங்கை வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார்.

முன்னதாக இலங்கை அணியின் முன்னாள் வீரர் சனத் ஜயசூரிய கடந்த 2000 ஆம் ஆண்டு சார்ஜாவில் இடம்பெற்ற இந்தியாவுக்கு எதிரான போட்டியில் 189 ஓட்டங்களை பெற்றிருந்தமை சாதனையாக இருந்தது.

இந்நிலையில், சனத் ஜயசூரியவின் சாதனையை முறியடித்தது மட்டுமல்லாது 200 ஓட்டங்களை கடந்த முதலாவது இலங்கை அணி வீரர் என்ற இரட்டை சாதனையை பெத்தும் நிஸ்ஸங்க புரிந்துள்ளார்.

## தோனிக்கு உச்சநீதிமன்றம் நோட்டிஸ்



அவதூறு வழக்கில் கிரிக்கெட் வீரர் மகேந்திர சிங் தோனிக்கு உச்சநீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

**தோனிக்கு உச்சநீதிமன்றம் நோட்டிஸ்**

அவதூறு வழக்கை எதிர்த்து ஐபிஎஸ் அதிகாரி சம்பத்குமார் தொடர்ந்த வழக்கில், கிரிக்கெட் வீரர் மகேந்திர சிங் தோனிக்கு நோட்டீஸ் அனுப்ப உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டு நடந்த ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் சூதாட்டம் நடந்ததாக புகார் வந்த நிலையில், ஐபிஎஸ் அதிகாரி சம்பத்குமார் தலைமையில் விசாரணை நடந்தது.

அப்போது, இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் எம்.எஸ்.தோனியும் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக தனது அறிக்கையில் சம்பத்குமார் குற்றம் சாட்டியிருந்தார்.

இது தொடர்பாக, கிரிக்கெட் வீரர் எம்.எஸ்.தோனி தொடர்ந்த அவமதிப்பு வழக்கில், சென்னை உயர்நீதிமன்றம் ஐபிஎஸ் அதிகாரி சம்பத்குமாருக்கு 15 நாட்கள் சிறை தண்டனை விதித்தது.

இதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் சம்பத்குமார் மேல்முறையீடு செய்த நிலையில், சென்னை உயர்நீதிமன்ற உத்தரவுக்கு நீதிபதிகள் அபய் ஒகா மற்றும் உஜ்ஜல் புய்யன் அமர்வு தடை விதித்தது.

மேலும், இது தொடர்பாக விளக்கம் அளிக்க எம்எஸ் தோனிக்கு நோட்டீஸ் அனுப்பவும் உச்சநீதிமன்ற நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

## சாம்பியன் பட்டம் வென்றார் சபலென்கா

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியை வென்று அரினா சபலென்கா, சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டி மெல்போர்ன் நகரில் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், இந்த தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நடந்த இறுதிப் போட்டியில் பெலாரஸ் வீராங்கனை அரினா சபலென்கா, சீனாவின் குயின்வென் ஜெங்குடன் மோதினார்.

இதில் சபலென்கா 6-3, 6-2 என்ற நேர் செட்களில் வென்று சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

இது இவரது இரண்டாவது கிராண்ட்ஸ்லாம் பட்டம் என்பது குறிப்பிடத்தக்கது.



## 500வது வெற்றியை பெற்ற ஜேர்மனி வீரர்



பாயர்ன் முனிச் அணிக்காக விளையாடி 500வது வெற்றியை பெற்றுத் தந்து தாமஸ் முல்லர் சாதனை படைத்துள்ளார்.

**Aleksandar Pavlovic கோல்**

பண்டஸ்லிகா தொடரில் Monachengladbach அணிக்கு எதிரான போட்டியில் Bayern Munich அணி மோதியது. ஆட்டத்தின் 35வது நிமிடத்தில் Monachengladbach வீரர் நிகோ எல்வெடி (Nico Elvedi) கோல் அடித்தார். அடுத்த 10வது நிமிடத்திலேயே பதிலடியாக, முல்லர் பாஸ் செய்த பந்தை Aleksandar Pavlovic (45வது நிமிடம்) அபாரமாக கோலாக மாற்றினார்.

**ஹரி கேன் தலையால் முட்டி கோல்**

அதன் பின்னர் ஆட்டத்தின் 70வது நிமிடத்தில் நட்சத்திர வீரர் ஹரி கேன் தலையால் முட்டி கோல் அடித்தார். பாயர்ன் அணியின் வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் Monachengladbach அணி திணறியது. இந்த நிலையில் பாயர்ன் வீரர் Matthijs de Ligt 86வது நிமிடத்தில், ஒரே கிக்கில் வந்த பந்தை தலையால் முட்டி கோல் அடித்தார்.

**தாமஸ் முல்லர் சாதனை**

இதன்மூலம் பாயர்ன் முனிச் அணி 3-1 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்றது.

இது அந்த அணியின் தாமஸ் முல்லருக்கு 500வது வெற்றியாகும். Bayern Munich அணிக்காக இந்த மைல்கல்லை எட்டிய முதல் வீரர் என்ற வரலாற்று சாதனையை முல்லர் படைத்தார். 34 வயதாகும் தாமஸ் முல்லர் பாயர்ன் முனிச் அணிக்காக 480 போட்டிகளில் 164 கோல்கள் அடித்துள்ளார்.

## தலைவராக ஜெய்ஷா மீண்டும் தேர்வு



ஆசிய கிரிக்கெட் கவுன்சில் தலைவராக பிசிசிஐ செயலாளர் ஜெய் ஷா மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இந்திய கிரிக்கெட் வாரியமான பிசிசிஐ-யின் செயலாளர் ஜெய் ஷா தொடர்ந்து 3வது முறையாக ஆசிய கிரிக்கெட் கவுன்சிலின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

ஜனவரி 31ம் திகதியான அன்று இந்தோனேசியாவின் பாலியில் நடைபெற்ற ஆசிய கிரிக்கெட் கவுன்சிலின் வருடாந்திரக் கூட்டத்தில் அதன் தலைவராக பிசிசிஐ செயலாளர் ஜெய் ஷா ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

2021ம் ஆண்டு முதல் முறையாக ஆசிய கிரிக்கெட் கவுன்சிலின் தலைவராக ஜெய்ஷா தேர்ந்தெடுக்கப்பட்டார். மேலும் இடையில் அவரது பதவிக்காலம் ஜனவரி 2024 வரை நீட்டிக்கப்பட்டது. 2021ல் 32 வயதில் ஜெய்ஷா தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட போது ஆசிய கிரிக்கெட் கவுன்சில் மேல்நிலை பதவிகளுக்கு வந்த இளம் தலைவர் என்ற பெருமையை கொண்டு இருந்தார்.

# உலக வலம்

## மன்னர் சார்லஸ்க்கு புற்றுநோய் பாதிப்பு - பக்கிங்ஹாம் அரண்மனை அறிவிப்பு



இங்கிலாந்து அரச பரம்பரையின் தற்போதைய அரசர், மூன்றாம் சார்லஸ் (வயது 75). இவரது தாயார் அரசி இரண்டாம் எலிசபெத் கடந்த 2022-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் காலமானார். அதை தொடர்ந்து மூன்றாம் சார்லஸ் அரசராக பதவி ஏற்றார்.

சில மாதங்களாக புரோஸ்டேட் சுரப்பி வீக்க பிரச்சினையால் அரசர் சார்லஸ் அவதிப்பட்டு வந்தார். இதற்காக அவர் லண்டனில் உள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

இந்நிலையில் அரசருக்கு புற்றுநோயின் ஒரு வகை கண்டறியப்பட்டு உள்ளதாக பக்கிங்ஹாம் அரண்மனை வெளியிட்டுள்ள அறிக்கையால் பரபரப்பு ஏற்பட்டு உள்ளது.

புரோஸ்டேட் சிகிச்சைகாக மருத்துவ பரிசோதனைகள் நடைபெற்றபோது புற்றுநோய் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளதாக கூறப்பட்டு உள்ளது. பக்கிங்ஹாம் அரண்மனை வெளியிட்ட அறிக்கையில், "புரோஸ்டேட் சிகிச்சைக்காக மருத்துவ பரிசோதனைகள் நடைபெற்றபோது மேலும் சில பிரச்சினைகள் இருப்பது தெரியவந்தது.

அதன்பிறகு நடந்த பரிசோதனையில் அவருக்கு புற்றுநோயின் ஒரு வகை கண்டறியப்பட்டு உள்ளது. இதற்காக மன்னருக்கு வழக்கமான சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகிறது.

மன்னர் சிகிச்சையில் இருப்பதால் பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்பதை தவிர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனினும் சிகிச்சை கால கட்டத்தில் அரசு பணிகள் மற்றும் ஆவண பணிகளை அரசர் வழக்கம் போல் மேற்கொள்வார்.

மன்னர் விரைவில் குணமடைந்து பொதுபணிக்கு திரும்புவார்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய மலேசிய மன்னர் தெரிவானார்



தென்கிழக்கு ஆசிய நாடான மலேசியாவில் தேர்தல்கள் நடத்தப்பட்டு பிரதமர் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறார். ஆனாலும் மலேசியாவில் இன்னும் மன்னர் அதிகாரம் நீடித்து வருகிறது. முக்கிய அரசியல் நியமனங்களை மேற்பார்வையிடுவது, இஸ்லாத்தின் உத்தியோகபூர்வ தலைவராக இருப்பது, மலேசியா நாட்டின் ஆயுதப்படைகளின் தளபதி என பல்வேறு பொறுப்புகளில் மன்னர் இருக்கிறார்.

நீதிமன்றங்கள், காவல் துறை, சட்டத்துறை ஆகியவற்றால் கொடுக்கப்பட்ட தண்டனையை ரத்து செய்வதற்கும் மன்னருக்கு அதிகாரம் இருக்கிறது. மலேசியாவில் 9 அரச குடும்பங்கள் உள்ளன. இவர்களில் ஒருவர் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை மன்னராக தேர்ந்தெடுக்கப்படுவார். இந்நிலையில் முன்னாள் மன்னரான பகாங் ஆட்சியாளர் சுல்தான் அப்துல்லா சுல்தான் அஹ்மத்ஷா வின் பதவிக்காலம் நிறைவு பெற்றதையடுத்து நாட்டின் 17வது மன்னராக ஜோகூர் அரச குடும்பத்தைச் சேர்ந்த சுல்தான் இப்ராஹிம் இஸ்கந்தர் பொறுப்பேற்றுக்கொண்டார்.

கோலாலம்பூரில் உள்ள தேசிய அரண்மனையில் அவரது பதவியேற்பு விழா கோலாகலமாக நடைபெற்றது. புதிய மன்னர் இப்ராஹிம் இஸ்கந்தருக்கு மலேசியாவை தவிர பிற இடங்களிலும் இதில் ஒரு கார் ஜெர்மனி சர்வாதிகாரியான ஹிட்லர் பரிசளித்தது. தனியாக ராணுவம் வைத்துள்ளார். இவரது குடும்பமும் சிங்கப்பூரில் நிலம் மற்றும் பாமாயில், ரியல் எஸ்டேட் மற்றும் தொலைத்தொடர்பு உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களில் முதலீடுகளை கொண்டிருக்கிறது. இதன் மதிப்பு ரூ. 47 ஆயிரம் கோடி ஆகும். மன்னர் இப்ராஹிம் இஸ்கந்தர் கூறும்போது, நான் அரசாங்கத்தை ஆதரிப்பேன். ஆனால் அவர்கள் தவறாக ஏதாவது செய்கிறார்கள் என்று நினைத்தால் அது குறித்து எச்சரிப்பேன் எனத் தெரிவித்துள்ளார்.

## ஈபிள் டவரில் அறிமுகமாகும் நடவடிக்கை




யுபிஐ (UPI) மூலம் பணம் செலுத்தும் நாடுகளின் பட்டியலில் பிரான்சும் (02-02-2024) இணைந்துள்ளது. பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் உள்ள இந்திய தூதகரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் என்.பி.சி.ஐ-ன் சர்வதேச பரிமாற்ற அமைப்பும், பிரான்சின் பரிவர்த்தனைகள் அமைப்பும் இணைந்து இந்த அறிவிப்பை வெளியிட்டன.

அதன்படி, இனி பிரான்ஸில் யுபிஐ பயன்படுத்தி பணம் செலுத்த இயலும். இனிமேல் பிரான்ஸ் செல்லும் இந்தியர்கள் யுபிஐ வாயிலாக பணப்பரிவர்த்தனைகளை மேற்கொள்ள முடியும். இந்தியர்கள் இனி ஈபிள் டவரை பார்க்க வேண்டுமெனில் முன்கூட்டியே யுபிஐ மூலம் பணம் செலுத்தி ஒன்லைனில் டிக்கெட் பதிவு செய்துகொள்ளலாம். இதேவேளை, முதன்முறையாக இந்தியாவின் யுபிஐ பரிவர்த்தனையை ஏற்கும் ஐரோப்பிய நாடாக பிரான்ஸ் திகழ்கிறது.

## ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்படவுள்ள சிக்கல்



சூடானின் போரிடும் தரப்புகளுக்கு இடையே போர்நிறுத்த ஒப்பந்தம் விரைவில் கையெழுத்திடப்படாவிட்டால் ஐரோப்பா புதிய சிக்கல்களை சமாளிக்க வேண்டிவரும் என அகதிகள் அமைப்பின் தலைவர் தெரிவித்துள்ளார்.

ஏனென்றால் போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படாவிட்டால் அங்குள்ள சூடானிய அகதிகள் ஐரோப்பா நோக்கி நகர்வார்கள் என்றும், இதனால் புதிய சிக்கல்கள் உருவாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"ஐரோப்பியர்கள் எப்போதும் மத்திய தரைக்கடல் வழியாக வருபவர்களைப் பற்றி மிகவும் கவலைப்படுகிறார்கள் என்றும் லிபியா, துனிசியா மற்றும் மத்தியதரைக் கடல் வழியாக மக்கள் நகர்வதைக் காண்போம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். சூடானில் 9 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் உள்நாட்டில் இடம்பெயர்ந்ததாகக் கருதப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பிரான்ஸில் புதிய மசோதா நிறைவேற்றம்

அமெரிக்காவில் பெண்களின் கருக்கலைப்பு உரிமைகளை ரத்து செய்து உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. இதற்கு நாடு முழுவதும் பல்வேறு எதிர்ப்புகள் கிளம்பின. அப்போது பிரான்ஸில் பெண்களின் கருக்கலைப்பு உரிமைகள் நிலைநாட்டப்படும் என ஜனாதிபதி இம்மானுவேல் மேக்ரான் உறுதி அளித்தார்.

இதன்படி பெண்களின் கருக்கலைப்பு உரிமை தொடர்பான மசோதா பிரான்ஸ் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. இது நாடாளுமன்றத்தின் கீழ் சபையில் நிறைவேறியது. இதன்பிறகு இந்த மசோதா செனட் சபைக்கு அனுப்பப்படும். அங்கு பெரும்பான்மை பெற்றால் இது சட்டமாக ஏற்றுக்கொள்ளப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆதரவற்ற நிலையில் 17 ஆயிரம் குழந்தைகள்

காஸா பகுதியில் 17 ஆயிரம் குழந்தைகள் பெற்றோர்கள், உறவினர்களால் கைவிடப்பட்டுப் பிரிந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தகவல் வெளியிட்டுள்ளது. இஸ்ரேல் மீது ஹமாஸ் அமைப்பினர் கடந்தாண்டு அக். 7ல் திடீர் தாக்குதல் நடத்தினர். இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் தற்போது வரை போரிட்டு வருகின்றனர். இந்தப் போரினால் இருதரப்பிலும் ஏராளமான பொதுமக்கள் உயிரிழந்து வருகின்றனர்.

போரில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 10 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது. இந்த நிலையில், பாலஸ்தீனத்தில் ஐ.நா குழந்தைகள் நிதியத்திற்கான தகவல் தொடர்புத் தலைவர் ஜொனாதன் கிரிக்ஸ் கூறுகையில், காஸாவில் சுமார் 17 லட்சம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர். மொத்த மக்கள் தொகையில் இது ஒரு சதவீதமாகும்.

காஸாவுக்குச் சென்ற ஐ.நா அதிகாரி, அங்கு 12 குழந்தைகளைச் சந்தித்ததாகவும், அவர்களில் மூன்று பேர் பெற்றோரை இழந்துள்ளனர். ஒவ்வொரு குழந்தைக்குப் பின்னாலும் ஒரு பயங்கரம் நிகழ்ந்துள்ளது என்று அவர் கூறினார். குழந்தைகள் காப்பகத்தில் உணவு, தண்ணீர், தங்குமிடம் இல்லாததால் போரில் கைவிடப்பட்ட குழந்தைகளைப் பராமரிக்க முடியாமல், பாலஸ்தீன குழந்தைகளின் மனநலம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. குண்டுவெடிப்புச் சத்தத்தைக் கேட்கும் ஒவ்வொரு முறையும் அவர்கள் மிக அதிகளவில் பதட்டம் அடைகின்றனர். பசியின்மை, தூக்கமின்மை மற்றும் பீதி ஆகியவற்றால் பெரியளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

காஸாவில் கிட்டத்தட்ட அனைத்து குழந்தைகளுக்கும் மனநலம் மற்றும் உளவியல் ஆதரவு தேவைப்படுவதாக யுனிசெஃப் மதிப்பிட்டுள்ளது. மனநலம் மற்றும் உளவியல் ஆதரவைப் பெறுவதற்கான ஒரே வழி போர் நிறுத்தம் மட்டுமே என்று அவர் கூறியுள்ளார்.






**இலங்கையின் 76வது சுதந்திர தினத்தை முன்னிட்டு பிரித்தானியாவில் நடாத்தப்பட்ட போராட்டம்**

## பருவநிலை மாற்றத்தால் காணாமல் போன கடல்

கஜகஸ்தானுக்கும், உஸ்பெகிஸ்தானுக்கும் இடையே 'ஆரல்' எனும் கடல் அமைந்துள்ளது. இந்த கடல் 68,000 சதுர கிலோ மீட்டர் பரப்பளவை கொண்டது.

இது உலகின் 4வது பெரிய கடல். 1960ல் சோவியத் நீர்ப்பாசனத் திட்டங்களால் ஆறுகள் திசைமாறிய பிறகு இது சுருங்கத் தொடங்கியது.

2010ல் பெரும்பாலும் வறண்டது. 'ஆரல்' கடல் காணாமல் போனதற்கான காரணம் குறித்து விரிவாக ஆய்வு நடந்தது.

1960ல் சோவியத் யூனியன் கஜகஸ்தான், உஸ்பெகிஸ்தான் மற்றும் துர்க்மேனிஸ்தான் ஆகிய வறண்ட சமவெளிகளில் நீர்ப்பாசன நோக்கத்திற்காக ஆற்றுத்தண்ணீர் திசை திருப்பப்பட்டது.

இப்பகுதியின் 2 பெரிய ஆறுகளான வடக்கில் சிர்தர்யா மற்றும் தெற்கில் அமுதர்யா ஆறுகள் பாலைவன பகுதியில் பருத்தி மற்றும் பிற பயிர்கள் உற்பத்தி செய்வதற்காக திசைதிருப்பி விடப்பட்டன.

இதனால் ஆரல் கடல் வற்ற தொடங்கியது. ஆறுகளின் தண்ணீரைத் திருப்பி பாலைவனத்தை விளைநிலமாக உருவாக்கிய பிறகு, நீர்வரத்து வெகுவாகக் குறைந்து கடல் முழுவதும் ஆவியாகிவிட்டது. கடந்த 50 ஆண்டுகளில் ஆரல் கடல் முழுவதும் வற்றி காணாமல் போய் நிலம் போல் மாறிவிட்டது. இது தற்போது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.



## 100 ஆண்டுகளுக்கு பிறகு பாரிஸில் ஒலிம்பிக் போட்டி





விளையாட்டு உலகில் மிகவும் பிரசித்தி பெற்ற ஒலிம்பிக் விளையாட்டு தொடர் எதிர்வரும் ஜூலை மாதம் பிரான்ஸ் நாட்டில் தொடங்க உள்ளது. இந்த சூழலில் பாரீஸ் ஒலிம்பிக் பதக்கத்தில் ஈபிள் டவரின் உலோகம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இந்தியா உட்பட பல்வேறு நாடுகளை சேர்ந்த வீரர்களும், வீராங்கனைகளும் எதிர்வரும் பாரீஸ் ஒலிம்பிக்கில் பதக்கம் வெல்லும் முனைப்புடன் தீவிர பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர். மொத்தம் 329 விளையாட்டுக்கள் இதில் நடத்தப்பட உள்ளது. சுமார் 10,500 பேர் இதில் போட்டியாளர்களாக பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கான ஏற்பாட்டினை ஏற்பாட்டாளர்கள் ஒருங்கிணைத்து வருகின்றனர். இந்த சூழலில் பதக்கம் குறித்து சுவாரஸ்ய தகவல் வெளியாகி உள்ளது.

வழக்கமாக ஒலிம்பிக் பதக்கத்தின் உருவாக்கத்தில் புதுமையை கடைபிடிக்க போட்டியை நடத்தும் நாடுகள் முற்படும். கடந்த முறை டோக்கியோ ஒலிம்பிக்கை நடத்திய ஜப்பான் நாடு, பயன்படுத்தப்பட்ட பழைய மொபைல் போன்களை கொண்டு பதக்கங்களை உருவாக்கியது. அது போல பிரான்ஸ் என்றதும் உலக மக்கள் அனைவருக்கும் சட்டென நினைவில் வரும் டவரின் உலோகத்தை தற்போது பதக்கத்தில் பயன்படுத்தி உள்ளது அந்நாடு. பதக்கத்தின் First Look வெளியான நிலையில் இந்த தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது பாரீஸ் ஒலிம்பிக் பதக்கத்தின் மையப்பகுதியில் ஈபிள் டவரின் உலோகம் ஹெக்சகன் வடிவில் இடம்பெற்றுள்ளது. இது கடந்த காலங்களில் ஈபிள் டவரை புதுப்பிக்கும் பணி மேற்கொண்ட போது எடுத்த உலோகம் என்றும், அது சேமிப்பு கிடங்கில் பத்திரமாக வைக்கப்பட்டு இருந்தது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பதக்கதின் மற்றொரு பக்கத்தில் நவீன ஒலிம்பிக்கின் தொடக்கத்தை குறிப்பிடும் வகையில் அமைந்துள்ளது.




இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 11.02.2024 அன்று வெளியிடப்பட்டது.